# மெய்யியல் நோக்கு

## PHILOSOPHICAL JOURNAL

உண்மையை அறிந்துணர





உலகைக் கடந்து
உயரே பறந்து
உன்னையே நீ அறிந்திடு
புவியைப் பிளந்து
புதிதாய் பிறந்து
புத்துலகம் நீ படைத்திடு

உண்மையை அறிந்துணர

**உன்னையே நீ அறிந்திடு!**


விழி: 04 பார்வை: 02 பங்குனி, 2004

## உள்ளடக்கம்

1) **அறிவிற்கும் அறியாமைக்கும் இடையிலான போராட்டம்**

பெ. உதயா (இளங்கலை மாணவி)

**A war Between Knowledge and Ignorance**

B. Uthaya (Under graduate)

2) **அறிவுடையோர் வாழ்க்கை**

பிரான்சிஸ் ஆனந்தராயர் *"வித்துவான் புலவர் வேல்மாறன்"*

**"The Life of the Learned" As Expressed in *'Thirukkural'* by *Valluvar.***

Francis Anantharayar – *"Vidvan Pulavar Velmaran"*

3) **கொன்பியூசியனிசமும், இறை அனுபவமும்**

அ. கொன்பியூசியஸ், B. Ph. (Rome)

**Confucianism and its God experience**

A. Confucious, B. Ph. (Rome)

4) **தற்கால மெய்யியல் உலகில் மொழியியல் ஆய்வு**

S. U. ஜெகான், B. Ph. (Rome)

**Linguistic Analysis in the Contemporary Philosophy**

S.U. Jehan, B. Ph. (Rome)

4) **சமய மெய்யியலின் இயல்பும் நோக்கும்**

லூ. மேசி சுஜந்தினி (இளங்கலை மாணவி)

**The Goal and the Nature of the Philosophy of Relig**

L. Mercy Sujanthini (Under graduate)

5) **யோவன் லொக்** (1632 – 1704)

அ. ஜஸ்ரின் (இளங்கலை மாணவன்)

**John Locke (1632 - 1704)**

A. Justin (Under graduate)

6) **தத்துவம் - விஞ்ஞானம் - சமயம்: ஓர் ஒப்பீடு**

பா. கிறிஸ்ரி நிமலராஜன், B. Ph. (Rome)

**Philosophy – Science – Religion: A Comparative Vi**

P. Christy Nimalarajan, B. Ph. (Rome)

6) **புரியவில்லை!!!**

சந்தேகி

# மெய்யியல் நோக்கு

(வருடம் இருமுறை)

## A PHILOSOPHICAL JOURNAL

(Bi – annual)

விழி: 04 பார்வை: 02 பங்குனி - 2004

**Publishers:**
Faculty of Philosophy
Xavier' Seminary
Columbuthurai
Jaffna
Sri Lanka.

வெளியீடு:
மெய்யியல் துறை
சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

"உண்மையை அறிந்துணர"

கல்வியாண்டு
**Academic Year** } 2003 - 2004

பருவம்
**Semester** } 02

**பங்குனி – புரட்டாதி**
March – September
**2003 - 2004**

தொகுப்பாசிரியரிடமிருந்து...

## "சமய மனிதனும்"..."அறியும் மனிதனும்"...

மனிதனை சமூக மனிதன், அரசியல் மனிதன், பொருண்மிய மனிதன், கலாச்சார மனிதன் என்று பலவாறாக ஆராட்சிக்குட்படுத்துவர். இந்த வரிசையில் மனிதனுடைய இயல்பான நிலைகளில் ஒன்றாக சமயத்தையும் கருத்திற் கொண்டு "சமய மனிதன்" என்ற கோட்பாடு இன்றியமையாததாக முன்வைக்கப்படுகின்றது.

"சமய மனிதன்" என்ற கோட்பாடு சமயத்தை மனித இயல்பு நிலைகளில் ஒன்றாக நோக்குகிறது. ஆனால் பின் நவீனத்துவத்தின் பின்னணியும், மாக்சிச-லெனினிச கண்ணோட்டங்களும், அவற்றால் உலகில் உருவாகிய கம்யூனிச முகாம்களும் (மொஸ்கோ, பீக்கிங்) சமயத்தை மனித இயல்பு நிலைகளில் ஒன்றாகப் பார்க்காது, முதலாளி வர்க்கத்தினால் திணிக்கப்பட்ட ஒரு சுரண்டும் கருவியாகவும், மனிதனை மயக்கும் அபினியாகவும் நோக்குகிற தன்மையை உருவாக்கின. எனவே "சமய மனிதன்" "பொருண்மிய மனிதனால்" பிரதியீடு செய்யப்பட்டான்.

இன்றைய பூகோளமயமாதற் பின்னணியில் கம்யூனிச கண்ணோட்டங்களும், முகாம்களும் தம் வீரியத்தை இழந்துவிட்டாலும் பெரும் பூதாகரமாக வளர்ந்துவரும் அமெரிக்கனிச-பொருள் முதல்வாதமும் அதனுடைய பயனுறுவாதமும் வேறொரு முறையில் "சமய மனிதனை" "பொருண்மிய மனிதன்" என்ற கருத்தின் ஊடாக பிரதியீடு செய்ய முனைவதை நாம் காணலாம். இதன் பின்னணியில் "சமய மனிதன்" "பொருண்மிய மனிதனால்" பிரதியீடு செய்யப்பட்டால், முதலாளித்துவம் ஒரு புதிய சமயமாகவும், அமெரிக்க டொலர் (பணம் அல்லது முதலீடு) கடவுளாகவும் வியாபாரம் செய்தல் (கொடுக்கல் வாங்கல்) வழிபாடாகவும், உலக வர்த்தக மையம் ஆலயமாகவும், வியாபாரத்தின் மூலமான இலாபம் திருப்தியாகவும் (சமய - இறையனுபவம்), வங்கி முதலீட்டின் அதிகரிப்பு புண்ணியமாகவோ அன்றேல் பேறுடைமையாகவோ நோக்கப்படும்.

இவ்வாறான அமெரிக்கனிச-பொருள் முதல்வாதத்தின் அதி தீவிரமான ஒருபக்கம் சார்ந்த சமயம் பற்றிய கொள்கைகள், ஹெகலின் இயக்கவியல் முறையில் எதிர்வாதம் ஒன்றையும் தோற்றுவித்துள்ளது. இந்த எதிர்வாதம்தான் உலகெங்கும் அமெரிக்க அணியினர்க்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டு வேகமாக வளர்ந்து வரும் இஸ்லாமிய தீவிரவாதமாகும். அமெரிக்கனிசத்தின் தீவிரமான பொருள் முதல்வாதத்தினை எதிர்கொள்ள சமயத் தீவிரவாதம் அவசியமானதென்று வாதிடுகின்ற பலர் உள்ளனர். இவர்கள் நியூட்டனின் எதிர்த்தாக்க விதியையும், ஹெகலின் இயக்கவியலையும் தமது வாதத்திற்கு துணைக்கு அழைப்பர். ஆனால் சமயத் தீவிரவாதம் "சமய மனிதன்" என்ற இயல்பு நிலையை அடிப்படையில் மறுதலிக்கிறது.

உலக வரலாற்றில் கிறிஸ்தவம் நடத்திய சிலுவைப் போர்களும், இஸ்லாத்தின் ஜிகாத்தும் (புனிதப்போர்) சமயம் பற்றிய பொருண்மிய நோக்கங்களும், சமயத் தீவிரவாதமும், மற்றும் வளர்ந்துவரும் சமய அடிப்படை வாதங்களும் சமயத்தின் உண்மை நிலையை மறுதலிக்கின்றவைகளே; ஏனெனில் சமயம் மனிதனின் இயல்புகளில் ஒன்று. அதனை வேறொருவர் கையாண்டு வெறி கொள்ள வைப்பதற்கும், சுரண்டுவதற்கும், பணம் சம்பாதிப்பதற்கும் பயன்படுத்தல் "சமய மனிதனிலிருந்து" சமயத்தை அந்நியமாக்கு வதாகும்.

சமயம் மனிதனின் இயல்பு நிலைகளில் ஒன்றானது என்றால் அது மனிதரை விடுதலைக்கும், முழுமைக்கும், ஒன்றிப்பிற்கும் இட்டுச் செல்ல வேண்டும். ஆனால் இன்றும் சமயம் மக்களை முட்டாள்களாகவே வைத்திருக்கிறது. மக்களை சுயமாக சிந்திக்கவிடாது தடுக்கிறது. வாய்மூடிகளாக, சொல்வதை செய்கிறவர்களாகவும் அன்றேல் இறை கோபத்திற்கு ஆளாவர் என்ற பயமுறுத்தலோடு முயற்சியற்ற மனிதர்களை உருவாக்குகிறது. அதேவேளை சமயம் ஒரு சிலர் தம் வாழ்வில் தாம் விரும்பியவைகளை அடைவதற்கு பயன்படுத்தும் ஏணியாகவும் இருக்கிறது.

எனவே "சமய மனிதன்" தன் நிலையை மீண்டும் பெற வேண்டுமென்றால், மீண்டும் "அறியும் மனிதனாக" மாற வேண்டும். உண்மை அறிவு என்னும் நெருப்பினால் சமயத்தை புடமிட்டு மனிதத்துவத்திற்கு சமயத்தின் பொருத்தப்பாட்டினை உணர்த்த வேண்டும். எனவே தான் இம் "மெய்யியல் நோக்கில்" சமயம் பற்றியதும் அறிவு பற்றியதுமான ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அறிகை மெய்யியலும், சமய மெய்யியலும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. அவை ஒன்றை ஒன்று நிறைவு செய்வனவாக உள்ளன. இயேசுக் கிறிஸ்து சொன்னதைப் போல "நீங்கள் உண்மையை அறிந்தால், அவ்வுண்மை உங்களுக்கு விடுதலையளிக்கும்". (யோவான் 8:32)

கடந்த "மெய்யியல் நோக்கில்" கடவுள் பற்றிய உரையாடல்களை தொகுத்திருந்தோம். அதன் தொடர்ச்சியாக இவ்விதழை சமயம் பற்றியும் அதன் தற்கால பொருத்தப்பாட்டிற்கு அறிவியலின் அவசியம் பற்றியும் தொகுத்து உங்களுடன் பேச விடுகின்றோம்.

உங்களது கருத்துக்கள், விமர்சனங்கள், ஆக்கங்கள் "மெய்யியல் நோக்கின்" பரந்த பார்வை வீச்சிற்கு பேருதவியாக அமையும்.

**யோ. போல் றொகான்**

# ‘Homo Religiosus’ and ‘Homo Sapiens’

There are many perspectives to study the human mystery. This has resulted in the considerations of man as ‘homo sapiens’ ‘homo vivens’ ‘homo politicos’, ‘homo culturalis’ ‘homo economicus’, ‘homo religiosus’ etc. ‘Homo religiosus’ is thus one of the considerations of humanity.

Man is a religious being. This means religion is something connected to human nature. But the post modern thinking pattern especially the Marxist – Leninist ideologies have made religion as something alienated to human nature: religion as a means of exploitation by the bourgeois society; religion as an opium of the masses. Thus economic conditions have taken the place of religion in human society.

In the contemporary background of globalization, where the extreme American materialism together with its pragmatic doctrines has taken the upper hand, ‘homo religiosus’ is actually substituted by ‘homo economicus’. Here capitalism is the new religion; money or the capital is the god; business or transaction is the liturgy; the material profit is the satisfaction or religious experience. The growth of the investment in the bank will make you worthy to enter heaven.

This extreme American materialism has also produced an anti thesis (to think in the line of Hegel): it is seen in the growth of Islam fundamentalism and terrorization all over the world especially against the American camp. But any religious fundamentalism and terrorization is against the nature of religion.

The crusades of the Christians, the Jihads of Muslims, the materialistic views on religion and all types of religious fundamentalism are against the real nature of religion. All these negate the ‘homo religiosus’.

If religion is something connected to human nature, then it has to lead humanity towards freedom and integrity. A holistic role has to be played by the religions. But now we see in our milieu, religions try to keep the status quo of the society, without leading its believers towards the realization of the full knowledge of truth.

Therefore, there is a necessity that 'homo religiosus' has to realize its state of 'homo sapiens'. Philosophy of knowledge and philosophy of religion have to complement each other. That is why in this issue we are bringing out the articles on both of the above topics. Our last issue was on the topic of God-talk. Here we continue with religion, in order to make it relevant to the human situations in the present society. As Jesus said "you know the truth and the truth will set you free." (Jn. 8:32)

**J. Paul Rohan**

- புகழில்லாத வாழ்க்கையை விட, மதிப்புள்ள மரணமே மகத்தானது.

  **- சாக்ரடீஸ்**

- அதிர்ஷ்டம் தலைவிதியில் இல்லை; நம் செயலில் உள்ளது.

  **- இங்கர்சால்**

- அறத்தின்மீது ஆண்டவன் பொறிக்கும் முத்திரை, அழகு.

  **- ரால்ப் வால்டோ எமர்ஸன்**

- வாழ அஞ்சுபவன், இறக்க அஞ்சுபவனைப் போல, கோழையே.

  **- ஃபீனியாஸ் ஃபிளெட்ச்சர்**

# அறிவிற்கும் அறியாமைக்கும் இடையிலான போராட்டம்

## (அறிகை மெய்யியலின் அடிப்படையில்)

- ஜெ. உதயா

அறிவுக்கும் அறியாமைக்கும் இடையிலான போராட்டத்தினின்றே அறிகை மெய்யியலின் பிரச்சினை ஆரம்பமானது எனலாம். பொதுவாக நாம் எல்லோருமே ஆகக் குறைந்தளவிலான அறிவையாவது பெற்றிருக்க வேண்டுமென விரும்புவோம். இதன் முயற்சியாகவே நாம் அறிவைப் புறவயமான வழிகளில் நின்று பெற விரும்புகின்றோம். அத்துடன் சுயமாகவும் பெற்றுக் கொள்ள முயல்கின்றோம்.

அறிவு என்பதனைப் பொதுவாக எடுத்து நோக்கின் நியாயப்படுத்தப்பட்ட உண்மை அறிவாகக் கொள்ளப்படுகின்றது. அறிவாராட்சியாளர்களின் கூற்றுப்படி நம்பிக்கைகள் உண்மையென நிரூபிக்கப்பட்டாலன்றி அறிவு எனும் தகுதியைப் பெறுவதில்லை. அறிவுக்கான ஆதாரங்களின் தேடலில் அறிவு எங்கிருந்து பெறப்படுகின்றது, அது எவ்வாறு பெறப்படுகின்றது என்ற கேள்விகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அனுபவத்தினை அறிவின் ஊற்றாகக் கொள்வது அனுபவவாதம் எனப்படும். அனுபவம் சாரா வழிமுறைகளும் இதில் பங்கு பெறுகின்றன என்று அனுபவ வாதத்தின் பிறிதொரு வகை எடுத்துக் காட்டுகின்றது. இதுவே அறிவாராட்சியியல் கொள்கையாகக் காணப்படுகின்றது. இதன்படி அறிவென்பது தவறற்ற அறிவின் வாயில்களாற் பெறப்படுகின்றது. அறிவின் வாயில்கள் அனைத்திலும் முக்கியமானது காட்சி. எல்லாவகையான அறிவு பெறும் வாயில்களும் ஏதொவொரு வகையில் காட்சியை ஆதாரமாகக் கொண்டவை. காட்சிக்கு அடுத்து முதன்மை பெறுவது அனுபவம் என்கிற எண்ணக்கருவாகும். நேர்வுலகு பற்றிய அனைத்து அறிவும் அனுபவத்தையே ஆதாரமாகக் கொண்டது. இந்தவகையிலே மக்களிடையில் அறிவினைப் பெறவேண்டும் எனும் ஆர்வம் காணப்படுகின்றது. குறிப்பாக கல்வி சார்ந்த அல்லது அறிய விருப்பமாக இருக்கும் வாழ்க்கையின் நோக்கமே அறிவைப் பெறுதலாகும். இவ்வாறு அறிவைப் பெற சாதாரண வழிகளையும் நாம் கண்டுகொள்ள முடிகின்றது. இயற்கையாக அறிவைப் பெறுதல், புறவயங்களினூடே அறிவைப் பெறுதல், சிலரது சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அறிவைப் பெறுதல், நேரடியாக எமது சொந்த அனுபவத்தினின்று அறிவைப் பெறுதல், என்று பல வழிகளில் நாம் அறிவைப் பெற முடிகின்றது.

இவ்வாறு மேலே கூறப்பட்டதைப் போன்று பல வழிகளிலே அறிவு பெறப்பட்டாலும் அறிவைப் பெறும் வாயில்களில் முக்கியமானவையாக இருவேறு சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்ட இருவேறு கருத்து வாதங்களான அனுபவவாதம், அறிவு முதல் வாதம் என்பவை

முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இதில் டெக்காட்டின் அறிவுமுதல் வாதக் கருத்தில் அவரது எண்ணக்கோட்பாடு பிரதான இடத்தைப் பெறுகின்றது. இதுபற்றி அவர் கூறுகையில் நாம் எவை குறித்தும் ஏதேனும் முடிவு எடுக்கும்போது அவை குறித்த எண்ணங்கள் எங்களிடம் இருந்தே எங்களுக்குத் தரப்படுகின்றன. இவ் எண்ணங்கள் உள்ளபடியால் நாம் பிழைவிட முடியாது என்கிறார். இதனால் நிச்சயமான அறிவைப்பெற அறிவு முதல் வாதமே ஏற்றது. என்பது இவரின் கருத்து. இவரைப் போன்றே இலைபினிட்ஸ் உண்மை அறிவைப் பெறுவது சிந்தனையால் மட்டுமே என்ற வாதத்தை முன்வைக்கின்றார்.

அடுத்து அனுபவ முதல் வாதிகளை எடுத்து நோக்கினால் இவர்கள் எல்லாவிதமான அறிவிற்கும் அனுபவமே முதலானது என்பர். இவர்களின் ஜோன் லொக் என்பவர் மனிதமனம் வெற்றுப்பலகை போன்றது என்றும், மனிதன் தனது ஐம்புலன்களால் உலக அனுபவங்களைப் பெறும்போதே அறிவைப் பெறுகின்றான் என்றார். எனவே அறிவாராட்சியியலின் இவ்விரு வாதங்களிலும் அறிவுமுதல் வாதிகள் அனுபவவாதிகளின் கருத்தை விமர்சிப்பவர்களாகவும் அனுபவவாதிகள் அறிவுமுதல் வாதிகளின் கருத்தை விமர்சிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். அனுபவமுதல் வாதம், அறிவுமுதல் வாதம் எனும் இரண்டு நிலைப்பாட்டு வழி அறிவினைப் பெறலாம் எனும் சிந்தனையை ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்த இம்மானுவேல் கான்ற் என்பவர் வலியுறுத்தினார். குறிப்பாக அறிவுமுதல் வாதம், அனுபவவாதம் எனும் இரண்டையும் முன்வைத்து அறிவுபெறப்படலாம் எனும் கருத்து விளக்கப்பட்டபோது விஞ்ஞான வளர்ச்சியின் தாக்கம் அறிவியல் ஆராட்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விஞ்ஞான அறிவுக்கு புலன் அனுபவமே காரணம் என 19ம் நூற்றாண்டில் எழுச்சி பெற்ற புலனறிவாதம் எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறாக அறிவைப் பெறும் வாயில்களில் அனுபவமுதல் வாதம், அறிவுமுதல் வாதம் என்பன முக்கியபங்கை வகிப்பதைக் காணலாம்.

அறிவின் ஐயம் பற்றிய கருத்துக்கள் ஆரம்பகால இலக்கியங்களிலும் எடுத்துக்காட்டப்படுவதை நோக்க முடிகின்றது. அக்கால ஐயவாதம், ஒழுக்கம், சமயம் மற்றும் இறையியல் போன்ற விடயங்கள் தொடர்பாகவே இருந்தன. அறிவென எதையும் பெறமுடியாது என சஞ்சயர் கருதினார். இறப்பின் பின்னும் இருப்புடையதென யாதேனும் ஒன்றுண்டா? இவ்வுலகம் எல்லைக்குட்பட்டதோ? உடலின் வேறாக ஆன்மா என ஒன்று உண்டா? எது சரியானது? எது தவறானது? அவை எவ்வாறு இனம் காணப்படுகின்றன? என்பது போன்ற ஐயவாதிகளின் வினாக்களுக்கு மற்றவர்களால் விடையளிக்க முடியவில்லை. இவ்வாறு பௌதீக உண்மைகள் ஒழுக்கக் கருத்துக்கள் தொடர்பாக எழுந்த ஐயவாதம் படிப்படியாக அறிவின் சாத்தியப்பாடு பற்றிய ஐயத்தைத் தோற்றுவித்தது. நாகர்ச்சுனர் அறிவுக் கொள்கை அனைத்தையும் ஐயவாதக் கண்கொண்டு

நிராகரித்தார். இவரின் விமர்சனம் முக்கியமாக அறிவின் வாயில்கள் தொடர்பான ஐயமாக இருந்தது. அறிவின் வாயில்கள் தொடர்பான ஐயவாதிகளின் விமர்சனத்தைத் தவிர்ப்பதற்காக அறிவார்ந்த விளக்கத்தை வேண்டாத முன்னது ஏதுவான அறிவுத் தொகுதியொன்றை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் வைதீக தரிசனங்களுக்கும் ஏற்பட்டது.

'காண்பதே நம்பிக்கைக்குரியது' என்பது மக்களின் அபிப்பிராயமாகும். ஆனால் மெய்யியலாளர்கள் நம்பிக்கை என்பதற்குப் பதிலாக அறிவு என்ற பதத்தினைப் பயன்படுத்துவர். காட்சி அறிவைத் தருகின்றது. அறிவாராட்சியியலில் நம்பிக்கை அறிவைத் தருவது புலன்களைத் தவிர வேறோன்றுமில்லை. காட்சி, அறிவின் ஊற்றுக்களில் மிகவும் முக்கியமானது. ஆனால் அறிவெனப்படுவது யாதென நாம் திட்டவட்டமாகக் கூறாதவரை காட்சி பற்றியும், காட்சி-ஐயம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு பற்றியும் தெளிவான விளக்கங்களைப் பெறமுடியாது. இந்திய மரபில் அறிகை ஓர் உளநிலையாகும். இவ் உள நிகழ்வு பற்றிய ஆய்வில் அறிவாராட்சியியல் அல்லது மெய்யியலுக்குரிய இடம் யாதென ஒருவர் வினவலாம். நிச்சயமற்ற அல்லது ஐயத்துக்கு இடமளிப்பதாயுள்ள பிரச்சினைகளே மெய்யியலுக்கு அல்லது அறிவாராட்சியலுக்கு காரணமாய் இருக்கின்றதென வாத்ஸ்யாயனர் குறிப்பிடுகின்றார். பிரச்சினைக்குத் தீர்வு அறியப்படுவதுடன் மெய்யியலாய்வு அல்லது அறிவாராட்சியியலின் தொடக்கத்துக்கு ஐயமே ஊற்றாக இருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

இவ் ஐய வாதக் கருத்து இரு வகைப்படுகின்றது.

1. முழுமையான ஐயவாதம்
2. சில குறிப்பிட்ட வகையான அறிவின் இருப்பை மட்டும் மறுக்கின்ற ஐயவாதம்.

இங்கு தீவிர ஐயவாதிகளின் கருத்தை நோக்கின் அது மிகவும் காத்திரத் தன்மை கொண்டதொன்றாகவே காணப்படுவதனை நோக்க முடிகிறது. அறிவினை தீவிரமாக மறுதலிக்கும் செயற்பாட்டினை உருவாக்கும் சிந்தனையே அறிவாகும் என மேலைத்தேச அறிமுதல் வாதிகள் குறிப்பிடுவதனை நோக்க முடிகின்றது. இதில் தீவிர ஐயவாதியான டேவிட் கியூம் முக்கியம் பெறுகின்றார். இவர் அனுபவவாதியாக காணப்பட்ட போதிலும் காரணகாரிய அடிப்படையிலேயே எதனையும் தெளிவு படுத்த முனைகின்றார். கியூம் வற்புறுத்த விரும்புவது எந்நிகழ்ச்சியும் காரணமின்றி நிகழாது என்று நாம் நம்புவதானது ஓர் அடிப்படையைக் கொண்டது என்பதாகும்.

ஆகவே உறுதியான அறிவு ஒருவருக்கு அமையாத நிலையில் அவர் ஐயுறுகின்ற நிலையிலேதான் இருக்க வேண்டும் என்பது பின்னர் கியூம், அறிவை நிராகரிப்பதிலிருந்து தெளிவாகிறது. ஐயுறுவோர் ஐயங் கொள்வோர் அல்லது உறுதியான அறிவு பெறாதவர் ஒருவர்

எதைக் குறித்தும் ஐயுறலாம். வானிலையைக் குறித்தோ, தனது வெற்றியைக் குறித்தோ, நினைவாற்றலைக் குறித்தோ, பிறரது சான்றுரையைக் குறித்தோ ஐயுறலாம். அறிவாராட்சியியலில் கியூம் ஐயக் கொள்கையை உடையவராகின்றார். உண்மை அல்லது இயற்கையைக் குறித்து நமது புலப்பதிவினாலோ, அல்லது புலனறிவுகளிலிருந்து பெறப்படும் கருத்தினின்றோ அறிய இயலுமேயன்றி இவற்றிற்கு அயலாக நாம் உண்மையை அறிய இயலாது என்று கண்ட முடிவே கியூம் என்பவரது ஐயமாகும். கியூம் தம்மைத்தாமே ஐயக்கொள்கையினர் எனக் கூறிக் கொண்டவர். ஆனால் பின்னே அவரது கருத்தினை விளக்க முற்பட்டோர் அவரை "அறியொணாக் கொள்கையினர்" என்றே கருதப் பொருந்தும் என்றனர். இச் சொல் T. H. ஹக்ஸ்லி என்பவரால் வழக்கிற்கு வந்தது. அறியொணாக் கொள்கையினை பலவாறாக கூறலாம். எவ்வாறு கூறினும் திரண்ட கருத்துரை யாதாயினும், அளவை நெறிப்படி அவ் உரையின் உண்மையினை நிறுவும்வரை சான்று காணஇயலாத நிலையில், அவ் உரையின் உண்மை குறித்து உறுதியுடன் விளக்குதல் வேறாகும் என்று ஹக்ஸ்லி விளக்கினார்.

எனவே இந்த வகையில் ஐயம் என்பது நிச்சயமற்ற நிலையினைக் காட்டுவதனை சுட்டுகின்றது. இவ்வாறான நிச்சயமற்ற நிலையானது இறுதிவரை ஏதொவொரு நிச்சயமான நிலையை எட்டும் நோக்கில் தொடர்ந்து கொண்டு செல்லும் கட்டத்திலே அறிவானது ஒருபுறமாக வளர்க்கப் பட்டுக்கொண்டு செல்வதனை அவதானிக்கமுடிகிறது. எனவே அறியாமையின் ஆராய்விலே அறிவினை வளர்த்துச் செல்லக்கூடிய சாத்தியப்பாடு கூடுதலாகக் காணப்படுவதனை நோக்க முடிகின்றது. அதே நேரத்தில் அங்கு அறிவானது அறுதியான முறையில் நிறுவப்பட்டு விட்டால் அறிவாராட்சியியலானது முற்றுப் பெற்றுவிடும். எனவே அறிவை வளர்க்கும் வழியானது அறியாமையிலிருந்தே வெளிக்கொணரப்படுகிறது. எனவே அறிவிற்கும் அறியாமைக்கும் இடையிலான போராட்டத்திலே அறிகை மெய்யியலின் வளர்ச்சியானது காட்டப்படுகின்றது என்பது அறுதியான ஒன்றாகக் காணப்படுவதனை நோக்க முடிகின்றது.

**துணைநின்ற நூல்கள்:**


1. மெய்யியல் ஓர் அறிமுகம் - க. சிவானந்தமூர்த்தி, - க. அன்ரன் டயஸ்
2. மேல் நாட்டுத் தரிசன வரலாற்றின் சுருக்கம் - சி. கதிரவேலுப்பிள்ளை
3. மெய்ப்பொருளியல் - ஓர் அறிமுகம் - ஏ. ஜே. பாம்
4. சைவசித்தாந்த அறிவாரய்ச்சியியல் - ஓர் அறிமுகம் - சோ. கிருஷ்ணராஜா
5. பின்நவீனத்துவம் - சோ. கிருஷ்ணராஜா
6. The Story of Philosophy - By Will Durant

# அறிவுடையோர் வாழ்க்கை

-பிரான்சிஸ் ஆனந்தராயர் *"வித்துவான் புலவர் வேல்மாறன்"*

புறநிலையில் மானிடம் தாம் கண்ட இயற்கையின் வலுவையும் அவற்றின் பெறுமானப் பயனையும் உணர்ந்து அவற்றின் நிலைக்களனாய் எழுந்த அச்ச உணர்வின் ஆன்மீகம், படிப்படியாய் அம்மானிடத்தின் சிந்தனைப் போக்கில் வளர்ச்சியான பல்வேறு மாற்றங்களைப் பெற்று வந்துள்ளதை நாம் அறிவோம். பிராமணியத்தின் மூடப் பழக்க வழக்கங்களின் தாக்கம், இந்திய உபகண்டத்தில் அனைத்து மொழி பேசும் மக்களையும் அவரவர்களின் தனித்துவமான ஆன்மீக நிலையில் இருந்தும் அதன் பின்னணியான வாழ்வின் மேம்பாட்டில் இருந்தும் சீரழித்தன.

வட இந்தியாவில் மாத்திரம் அல்லாமல் தென்னிந்தியாவிலும் பரவலாக பிராமணியத்தின் பழைய வேதகாலப் பிற்போக்கு வாதத்தின் தாக்கம் அளவற்ற சமூகக் கேடுகளை அங்குள்ள மக்கள் மத்தியில் உண்டு பண்ணியதால் அவற்றில் அறிவுள்ள மக்கள் இடையே வெடித்த சிந்தனைப் புரட்சி படிப்படியாகத் தமிழகத்திலும் முகிழ்த்தது. இச்சிந்தனை புரட்சிக்கு வித்திட்டவர்கள் சமணரும், பௌத்தருமாவர்.

சங்க காலம், சங்கமருவிய காலம் என்று சொல்லக்கூடிய பழந்தமிழர் காலத்தில் தமிழ் மக்களிடையே காணப்பட்ட ஒவ்வாத ஒழுக்கங்களான மது அருந்துதல், புலால் உண்ணுதல், பரத்தையர் காமக் கிழத்தியர் உறவு, சாதிப் பாகுபாடுகள், உயிர்ப்பலி இடுதல், சூதாடுதல், யாகம் செய்தல் இன்னோரன்ன தீய பழக்க வழக்கங்களைக் கண்டித்து மக்களை நல்லொழுக்க வாழ்விலே சீர்படுத்த சமணரும் பௌத்தரும் முனைந்தனர்.

'மனித சீவியத்தின் வாழ்வுடைமை அர்த்தம் உடையதாய் இருத்தல் வேண்டும்' என்பதிலே சமணரும் பௌத்தரும் மிகமிகக் கருத்தூன்றல் உடையோராய் விளங்கினர். முதன்முதல் தென்னிந்திய நிலப்பரப்பில் அவர்கள் காலூன்றியபோது அக்காலத்தில் வடமொழிக்கு இணையான முக்கிய மொழியாக விளங்கிய யாவராலும் பேசப்பட்ட தமிழ் மொழியை ஐயந்திரிபறப் பயின்று அம்மொழியிலேயே பாண்டித்தியம் பெற்று தம் சிந்தனைப் பெருக்கை மக்களுக்கு இலகுவாக விளங்குமாறு போதித்தனர். அதனால் தமிழ் மக்களில் அறிவுடையோர் பலர் சமணம் பௌத்தம் ஆகிய மதங்களைப் பின்பற்றினர். பின்பற்றாவிட்டாலும் அவர்களிடம் இருந்து பெற்ற நல்ல கருத்து வளங்களை ஏற்றுக் கொண்டனர். அந்நிலையில்தான் தமிழ் மொழிக்கு வளமான நல்ல இலக்கண இலக்கிய நூல்கள் அவர்களால் கிடைத்தன.

சமணரும் பௌத்தரும் ஆரம்ப காலத்திலே தமிழ் மக்களுக்குச் செய்த பணி அவர்களின் ஆன்மீகப்பணி, மதத்தின் பிரசாரப் பணி என்று சொல்வதைவிட முற்றும் முழுதான 'வாழ்வியற் பணி' என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆன்மீகத்தின் மூலவேர் ஒழுக்கம் நிறைந்த, அர்த்தம் உள்ள அறிவுடைமை வாழ்வாக இருக்க வேண்டும் என்பதே சமணர் பௌத்தரின் முக்கிய கொள்கை வாதமாக இருந்தது. இதில் பௌத்தரைவிட சமணர் ஒருபடி மேலெனச் சொல்லலாம்.

அன்றையத் தமிழகத்தில் சமணர் பௌத்தரால் எழுந்த அறிவின் பசுமைப் புரட்சியின் காலச் சூழலில்தான் வள்ளுவர் பெருந்தகை தமிழ் மக்களுக்கும் உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் 'திருக்குறள்' என்னும் ஒப்பற்ற நூலை இயற்றினார். தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் பழைய உரையாசிரியர்களான நச்சினார்க்கினியர், குணசாகரர் முதலானோர் திருக்குறளை 'திருவள்ளுவர்' என்றும் 'திருவள்ளுவப்பயன்' என்றும் குறிப்பிட்டுள்ளனர். இப்பெயர்களைத் தவிர உத்தரவேதம், பொய்யாமொழி, வாயுரை வாழ்த்து, தெய்வநூல், பொதுமறை, தமிழ்மறை என்ற வேறு பெயர்களும் இந்நூலுக்கு உள்ளன. 1330 குறள் வெண்பாக்களை உள்ளடக்கிய இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பால்களைக் கொண்டு விளங்குகின்றது.

இவ்வுலக வாழ்வுக்கு அறமும், பொருளும், காமமும் இன்றியமையாத கோட்பாடுகளாக விளங்குகின்றன. அறத்தினால் பொருளும், பொருளினால் காமமும் உடையதான வாழ்வு தமக்கும் பிறர்க்கும் பயன் அளிக்கக் கூடியதாய் ஒவ்வொருவரின் வாழ்வும் அமைய வேண்டும். பொதுவாக அகவாழ்விலும் புறவாழ்விலும் அறத்தின் வழியதான சீரான வாழ்வை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் என்பதே திருக்குறள் தரும் பாடமாகும்.

வாழ்வு சீர்பெற அமைவதற்கு அறிவுடைமை இன்றியமையாதது. அறிவு அறியப்படுவதே தவிர அறிந்து முடிந்த தொன்றன்று.

இன்றைய விஞ்ஞான உலகம் மனித உடலின் கூறுகளில் மூளைப் பகுதிக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது. ஒரு காலத்திலே மனித உறுப்புக்களுள் 'இதயம்'தான் முக்கியம் என்றார்கள். ஆனால் இப்போது 'மூளை' பகுதிதான் முக்கியம் என்று உடலியல் ஆய்வாளர் கூறுகின்றனர்.

மனித உடலின் எல்லா உறுப்புகளையும் ஓரளவு ஆராய்ந்த மருத்துவ உடலியல் விஞ்ஞான உலகம் இன்றுவரை மனித மூளையைப் பற்றிய முழு ஆய்வையும் நிறைவு செய்து தரவில்லை. மனித வளத்தின் எல்லா ஆய்வுகளுக்கும் மூளைதான் முக்கிய காரணியாக

விளங்குகின்றது. இப்பிரபஞ்சத்தின் தொகுதிகளையும் அவற்றின் வியாபகத் தன்மையையும் அதன் விளக்கங்களையும் கணக்கிட்ட விஞ்ஞானியர் பலர் மனித மூளையின் பெரும்பகுதி மனிதனால் இன்னும் முற்றாகப் பயன்படுத்தப்படவில்லை என்றே கூறுகின்றனர்.

மூளையின் இடமாகப் பெறப்படும் அறிவை 'மூளை' என்றுதான் குறிப்பிடுகின்றோம். மூளைசாலி, மூளை உள்ளவன் என்றால் அறிவுள்ளவன் என்றும், மூளை இல்லாதவன் என்றால் அறிவில்லாதவன் என்றும் கூறுவதை உலக நடைமுறையில் பார்க்கிறோம்.

இன்று ஆன்மீக உலகையும், நவீன விஞ்ஞான உலகையும் ஆள்வதே மனித மூளைதான். மனித மூளையில் பெறப்படும் அறிவின் ஆற்றல் மிக விரிவானது; எல்லை அற்றது. இதைக் "கற்றனைத்து ஊறும் அறிவு" (குறள் - 396) என்றும், "அறிதோறும் அறியாமை கண்டற்றால்" (குறள் 1110) என்றும் வள்ளுவர் கூறியுள்ளார்.

உலகில் வாழும் அனைத்து மனித இனத்தின் அறிவு நிலையின் இருப்பு அவ்வவ் இனத்தின் மொழியாலும் எண்ணாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. மொழியினால் சிந்தனையின் வெளிப்பாடும் கருத்துப் பரிமாற்றமும் விருத்தியாகின்றன. எண் என்னும் கணிதத்தால் இப்பிரபஞ்சத்தின் இயக்கமே கணிக்கப்படுகின்றது. அறிவியல் விஞ்ஞானம் கணித முறையில்தான் பகுத்து ஆராயப்படுகின்றது. இதனால்தான் அறிவுடைமைக்கு மூலாதாரமான எண்ணையும் எழுத்தையும் பண்டையோர் போற்றியது போல வள்ளுவரும் (குறள் 392, 393) போற்றியுள்ளார்.

அறிவுடைமை என்பது நுண் அறிவைக் கொண்டது. நுண்ணறிவு எல்லோர்க்கும் இயல்பாக இருந்தாலும் அதன் ஆற்றலின் தன்மை நூல் அறிவினால் மேலும் விருத்தியாகின்றது. நூல் அறிவைக் கற்றல் கேட்டல் இவை இரண்டாலும் பெறலாம். நுண் அறிவைப் பிறர் உணர்த்துவதால் பெற முடியாது. தாம் உணர்வதால் மாத்திரமே அவ் அறிவைப் பெற முடியும். அத்துடன் இந் நுண் அறிவானது உலக வாழ்வின் நடைமுறைக்கு இன்றியமையாதது. மேலும், இவ் அறிவுதான் ஒவ்வொரு மனிதனையும் பாதுகாக்கின்றது. அவனை அழிவில் இருந்து காக்கும் கருவியும் அதுவே. அக்கருவியை எந்தப் பகைவரும் கண்கூடாகப் பார்க்கவும் முடியாது. பகைவரால் பிறரால் பார்க்க முடியாத மிக நுட்பம் வாய்ந்த உள் அழிக்கலாக, அரணாக விளங்கும் நுண் அறிவுதான் மனதை ஐம்பொறிகளின் வழியே செல்லவிடாது தடுத்து, பிறர்க்குத் தீமை செய்வதை விலக்கி நன்மை செய்யத் தூண்டுகின்றது. பொதுவாக அறிவுடையோர் என்றால் பிறர்க்கு நன்மை செய்வதில் ஆர்வம் உடையோராகத்தான் இருப்பார்.

**அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்கல் ஆகா அரண்.** (குறள் - 421)

**சென்ற இடத்தால் செலவிடா தீ தொரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு** (குறள் - 422)

ஒவ்வொரு பொருளின் பெறுமதியையும் அவற்றின் தன்மையையும் அவ்வப் பொருளின் பயன்பாட்டைக் கொண்டே தெரிந்து கொள்ளலாம். நல்ல பயன்பாட்டின் பொருளை ஏற்றுக் கொள்வதே அறிவுடைமையாகும்.

பொருளைப் பெறும் இடம் முக்கியமன்று. பொருள் தான் முக்கியம். நல்ல பொருள் பகைவரிடம் இருந்தும் பெறலாம். உயர்ந்தவரிடத்தில் இருந்தும் பெறலாம். எவர் எவராக இருந்தாலும் யார் யாராக இருந்தாலும் அவரவர்களிடம் இருந்து பெறப்படும் பொருள் எத்தன்மையது என்பதை ஆராய்ந்து ஏற்பதே நன்று.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு** (குறள் - 423)

இதில் இன்னுமொன்றை நாம் கவனிக்க வேண்டும். பொதுவாக மனிதர்கள் விருப்பு வெறுப்புக்கு ஆட்பட்டே எதையும் ஆராய்ந்து பாராமல் ஏற்றுக் கொள்வதும் புறந்தள்ளுவதுமாக இருப்பதினால்தான் அதன் பின்விளைவு துன்பமாக முடிகின்றது. தனக்கு நண்பராக வேண்டப்பட்டோர் ஒன்றைக் கூறினால் அதைக் கண்மூடித்தனமாய் மெய்யென உடனே ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஏற்றுக் கொள்வதோடு அதனைப் பின்பற்றவும் முனைகின்றனர். தனக்கு வேண்டாத பகைவர் எதைக் கூறினாலும் சொன்ன மாத்திரத்திலேயே சொன்னவற்றைப் புறந்தள்ளி விடுகின்றனர். இதனால் முக்கியமாக உரிய காலத்தில் பெறவேண்டிய பொருளின் பயனை இழக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

அறிவுடைமையில் கருத்துப் பரிமாற்றம் மிகமிக முக்கியமானது. ஒரு பொருளை எடுத்துரைப்போன் தான் சொல்ல எண்ணிய பொருளைக் கேட்போனுக்கு எளிதில் விளங்குமாறு சொல்ல வேண்டும். கேட்போரும் தாம் கேட்ட சொல்லின் பொருள் நிலையில் பொதிந்துள்ள மிக நுட்பமான உண்மைப் பொருள் என்ன என்பதை அறிந்து அப்பொருளின் பயனைப் பெறவேண்டும்.

எந்தப் பொருளையும் பிறர் விளங்குமாறு சொல்லும் ஆற்றலும் பிறர் பேசும் பேச்சில் அடங்கி உள்ள பொருள் நுட்பந்தான் என்ன என்பதை அறியும் ஆற்றலும் அறிவுடைமையின் பாற்படும்.

**எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்ப தறிவு** (குறள் - 424)

அறிவுள்ள பெரியோரை மையமாகக் கொண்டதுதான் உலக நடைமுறை.

இதைத் தொல்காப்பியரும்,

**வழிக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர்கட் டாக லான**

(தொல்காப்பியம் - பொருள் - மரபியல் - 94)

என்றார். நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் உயர்ந்தோர் எனப் போற்றப்படும் அறிவுள்ளோரின் நடைமுறையைப் பின்பற்றியதாகவே அமையவேண்டும். இன்ப துன்ப உணர்வுகளுக்கு ஆட்பட்டு தம் வாழ்வை மாய்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இன்பத்தைக் கண்டு மெய்மறந்து குதூகலிப்பதும் வேண்டாம். துன்பத்தைக் கண்டு துவண்டு சஞ்சலப்படவும் வேண்டாம்.

இன்ப துன்பத்தில் மனந்தளராத நடுநிலையான வாழ்வையே அறிவுடைய பெரியோர் மேற்கொள்வர். அறிவுடையோராகிய உலகத்தவர் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப பிறர்க்குத் தீங்கு பயவாத நடைமுறையைப் பின்பற்றுகின்றனர். அப்பின்பற்றலின் வழிகாட்டலினால்தான் நம் ஒவ்வொருவருடைய அறிவும் முழுமை பெறுகின்றது.

**எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வ துறைவ தறிவு** (குறள் - 426)

அறிவுடையோரைக் கற்றோர் என்று போற்றும் உலகம் அறிவில்லாதவரைக் கல்லாதவரென்றும் "விலங்கொடு அனையர்" என்றும் தூற்றுகின்றது. விலங்கினம் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும் ஆற்றலைக் கொண்டதன்று. ஆறறிவு படைத்த மனிதனால்தான் அதுமுடியும். அதனால்தான் "சிந்திக்கத் தெரிந்தவனே மனிதனாவான்" என்றனர் தமிழ்ப் பெரியார். எதிர் காலத்தில் எது நிகழும் என ஓர் அளவு சிந்தித்துப் பார்த்து செயலாற்றும் திறன் அறிவற்றோருக்கில்லை. கற்றறிந்த அறிவுடையோரே இறப்பு நிகழ்வு இவ்விரண்டு காலங்களின் நிகழ்வுகளை அனுபவமாகக் கொண்டு எதிர் காலத்தைத் தமக்குள் வரையறுத்துக் கொள்ளுகின்றனர். அதற்கேற்றாற் போல் திட்டமிட்டும் செயற்படுகின்றனர். அவ்விதம் வாழ்வதினால்தான் அவர்களின் வாழ்வு அவர்களுக்கும் பிறர்க்கும் பயனுள்ளதாய் அமைகின்றது.

**அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்**
**அஃதறி கல்லா தவர்.** (குறள் - 427)

அறிவில்லாதவர் நெஞ்சத்து அவலம் இல்லாதவராகவே வாழ்வர். நெஞ்சத்து அவலம் என்றால் தீமையைக் கண்டு அஞ்சும் மனநிலையாகும். தீமையைக் கண்டு அஞ்சும் மனநிலையை அறிவில்லாதவரிடம் பார்க்கவே முடியாது. தனக்கோ தன்னைச்

சார்ந்தவர்க்கோ தீமை வரும்போது அதைக் கண்டு அஞ்சும் சுபாவம் அவர்களுக்கு இல்லை.

தீமையான செயலுக்கு அஞ்சுவதும், நன்மையான செயலுக்கு அஞ்சாததுந்தான் அறிவுடையார் பண்பாகும். அறிவுடையோர் உலகத்தாரிடம் நிகழும் தீமையான காரியங்களைக் கண்டு அஞ்சாதவர்கள் தாம் பிறர்க்கு தீமையான காரியங்களைச் செய்யவும் அஞ்சுவார்கள். அதேவேளை நன்மையான காரியங்கள் எதுவாயினும் கண்டு அஞ்சமாட்டார்கள். பிறர்க்கு நன்மையான காரியங்களைச் செய்ய பின் நிறகவுமாட்டார்கள். எவ்வளவுதான் அதற்கு எதிர்ப்பு வந்தாலும் அஞ்சாமல் அதனை எதிர்கொண்டு அதற்கென முகங் கொடுப்பார்கள்.

அஞ்ச வேண்டிய இடத்தில் அஞ்சாமையோடு வாழ்வது படு முட்டாள்த்தனம். அதுவே அறியாமையாகும். அஞ்சவேண்டிய இடத்தில் அஞ்சுவதுதான் அறிவுடையோர் தொழிலாகும். அதுவே புத்திசாலித்தனமுமாகும்.

**அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்** (குறள் - 428)

பின்னால் வரக்கூடிய துன்பங்களை முன்கூட்டியே அறியும் வல்லமை அறிவுடையார்க்கு மாத்திரமே உண்டு. அதனால்தான் எதிர்பாராமல் வரும் எத்துன்பத்தையும் அவர்களால் தாங்கவும் முடியும்; சமாளிக்கவும் முடியும்.

**எதிரதா காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்.** (குறள் - 429)

அதிர வருவதோர் நோய் என்றால் எதிர் பாராத துன்ப அதிர்ச்சியைக் கொடுக்கும் நோய் என்பதாம். உலகியலில் இந்நோய் எவ்விடத்திலும் எவர்மட்டிலும் வரக்கூடியது ஒன்றுதான். ஆனாலும் அந்நோயைத் தாங்கும் சமநிலையான மனோ நிலை எல்லோர்க்கும் இருப்பதில்லை. முற்றும் உலகியலின் நடைமுறையான வாழ்வை அறிந்து தெரிந்த அறிவுடையோர்க்குத்தான் உண்டு. ஆதலால், எதிர்பாராத அதிரவரும் நோய் அறிவுடையோரை ஒன்றும் செய்வதில்லை.

நோய் என்பது உடலால் மாத்திரம் ஏற்படக்கூடியதன்று. அகத்தால் ஏற்படும் நோயும் அடங்கும். வருந்துவது உடல் மாத்திரம் அன்று. அகமுந்தான்.

பொருளினால், வேறு அனைத்து செல்வங்களால் வரும் மயக்கம் அறிவுடையோர் இடத்தில் இல்லை. புறத்திலே காணப்படும் பொருளின் பெருக்கத்தால் ஏற்படும் மிக்க இன்ப மயக்கத்தை அவர்கள் கொள்வதில்லை. செல்வம் அழிந்தவிடத்து அந்த செல்வங்களுக்காக

மனம் வருந்துவதும் இல்லை. பெருக்கத்திலும் அழிவிலும் சமநிலையான மன நிலையோடு வாழ்ந்து தம்மைப் பக்குவப் படுத்திக் கொள்பவர்தாம் அறிவுடையோர். அதனால்தான் அறிவுடையோர் எவ்விடத்தில் எந்நிலையில் வாழ்ந்தாலும் எல்லாம் உடையோராகவே வாழ்கின்றனர்.

புறநிலையில் அறிவுடையோர் வாழும் இடம் மண் குடிசையாக இருக்கலாம். அறிவில்லாதவர் வாழும் இடம் மாளிகையாக இருக்கலாம். இங்கு, தான் வாழும் இடம் முக்கியமன்று. "வாழும் வாழ்க்கைதான் முக்கியம்."

இன்பத்தையும் துன்பத்தையும், உயர்வையும் தாழ்வையும், சமநிலையாகப் பேணி வாழ்கின்ற மனப்பக்குவம் உள்ள அறிவுடையோர் வாழ்க்கை, எங்கு அமைந்தாலும் நிறைவுடையதாகவே இருக்கும். அறிவில்லாதவர் வாழ்க்கையோ எங்கும் எதிலும் நிறைவற்றதாக குறை உள்ளதாகவே இருக்கும்.

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்.** (குறள் - 430)

அறிவுடையார் எல்லாம் உடையவர் என்பது உண்மைதான். அவரிடம் உள்ள அறிவுக்கும் அறிவினால் பெற்ற வாழ்வுக்கும் எவ்வித குறையுமே இல்லை.

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே! தாமும் வாழ்ந்து, தம்மைச் சூழ்ந்த அனைவரையும் வாழ வைப்பதே அறிவுடையோர் வாழ்க்கை. அதுவே உண்மையான வாழ்க்கை! பயன்தரும் வாழ்க்கை!

அத்துணை பெறுமதியான வாழ்க்கை, பிறரின் துன்ப துயரங்கள் பகிர்ந்து கொண்டு துன்பப்பட்டோர் மட்டில் கை கொடுக்கும் வாழ்க்கையாக அமையாதுவிட்டால், அவர்களின் அறிவினால்-அறிவுடைமையினால்-உலகுக்கு ஆகுவது என்ன? யாதேனும் பயன் தரும் ஒன்று உலகுக்கு ஆகும் என்று உலகத்தாராகிய நீங்களே சொல்லுங்கள் பார்ப்போம்?!!

உலகில் உயர்ந்தோர் என கணிக்கப்படும் அறிவுடையோரைப் பார்த்து இக்கேள்வியை நான் கேட்கவில்லை. உலகப் பொதுமறையைத் தந்த வள்ளுவப் பெருந்தகையே கேட்கின்றார்.

**அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**
**தன்நோய்போல் போற்றாக் கடை.** (குறள் - 325)

# கொன்பியூசியனிசமும், இறை அனுபவமும்

-அ. கொன்பியூசியஸ்

## கொன்பியூசியனிசம் : தோற்றப்பாடு

கிறிஸ்துவுக்கு முன் 551-479 க்கும் இடைப்பட்ட காலத்தில் கொன்பியூசியஸ் என்னும் ஒரு சீன தத்துவ ஞானி வாழ்ந்தார். அவருடைய காலத்திலே சமூக அரசியல் ரீதியான பல குழப்பங்கள் ஏற்பட்டு இருந்தன. சீன சமூகங்களுக்கிடையேயும் அண்மை அரசுகளுக்கிடையேயும் போட்டிகளும் பிரிவினைகளும் தனித்தியங்கல் கொள்கைகளும் (Individualism) தலைவிரித்து தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தன. பல கடவுட் கொள்கைகளை வளர்த்து சமூகங்களிடையே கட்சி மனப்பான்மையை வளர்த்து விட்டிருந்தன. சில சமூகங்கள் ஏனைய சமூகங்களால் நசுக்கப்பட்டும் இருந்தன. நான், என்னுடைய, நாங்கள், எங்களுடைய என்ற சொற்பிரயோகங்கள் முதன்மை பெற்றிருந்தன. தான், தன் குடும்பம், தன் சமூகம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்னும் தன்னியங்கல் கொள்கை காணப்பட்டது.

இந்தப் பின்னணியில்தான் கொன்பியூசியஸ், சூகுங் (CHOU KUNK) என்று அழைக்கப்படும் தனது ஆசிரியரின் படிப்பினையாலும் கோட்பாட்டாலும் உந்தப்பட்டவராக 'பரிசுத்த ஒருமைப்பாட்டை' (sacred oneness) இலக்காகக் கொண்ட தமது வாழ்க்கை முறை கோட்பாட்டை முன்வைத்தார். அவர் தன்னுடைய இக்கோட்பாட்டில் மனிதனை மையமாக்கி ஒவ்வொரு மனிதனையும் இந்த பரிசுத்த ஒருமைப்பாட்டை அடைய அழைக்கின்றார். இத்தகைய வாழ்க்கை முறைதான் கொன்பியூசியனிசம் என்று அழைக்கப்படுகின்றது.

## கொன்பியூசியனிசம் ஒரு மதமா?

சமயம் என்றால் என்ன? என்று வரையறுத்துக் கூறுவது பல சிக்கல்கள் நிறைந்த ஒன்றாகவே இப்பொழுதும் இருந்து வருகின்றது. ஏனென்றால் சில பழக்க வழக்கங்கள் சம்பிரதாயங்களை கொண்ட பாரம்பரிய சமயங்களை விட இப்பொழுது எம் மத்தியில் தோன்றியிருக்கும் கருத்தியல்கள், வாழ்க்கை முறைகள் கூட அத்தகைய பழக்க வழக்கங்களை உடைமையாக கொண்டிருப்பதே காரணமாகின்றது. இந்த வகையில் கொன்பியூசியனிசம் ஒரு மதமா? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கும் சில பழக்க வழக்கங்கள் இருக்கின்றன. இதுவும் மனிதனுடைய அடிப்படையிலான விவகாரங்களோடு தொடர்புடையது. ஆகவே இதையும் ஒரு சமயம் என்கிறார்கள் சிலர். இன்னும் சிலர் இங்கே கடவுட் கோட்பாடு இல்லை; மனிதனையே இது மையமாகக் கொண்டது. எனவே இது

ஒரு வாழ்க்கை முறை என்று மட்டும் கூறி நிற்கிறார்கள். மேலும் சிலர் இது சமூக உறவுகளை அடிப்படையாகக்கொண்டது சமூக ஒற்றுமையை மையமாகக் கொண்டது. எனவே இது ஒரு சமூகம், ஒழுக்கம் அரசியல் சார்ந்த கருத்தியல் என்கிறார்கள். எது எப்படி இருப்பினும் அவரவர் கோணத்தில் இருந்து பார்க்கும் போது அவர்களது வரையறைகள் சரியானவையாக தென்படலாம். என்னுடைய பார்வையில் இதை மனிதனோடு முழுமையாக தொடர்புடைய ஒரு வாழ்க்கை முறையாகப் பார்த்தே இதன் இறையனுபவத்தை சிறிது ஆராய்கின்றேன்.

**இறையனுபவம்**

சமயங்களில் இறையனுபவம் விளக்கப்படுவதைப்போல கொன்பியூசியனிசம் என்ற இந்த வாழ்க்கை முறையிலும் கூட இது பற்றி கூறப்படுகிறது; நம்பப்படுகிறது. இங்கே மனிதத்துவத்தின் முழுமையை நோக்கிய வளர்ச்சியே இறையனுபவமாக விளக்கப்படுகிறது. இந்த வாழ்க்கை முறையின் தத்துவத்தின்படி இறையனுபவத்தை பெற முதலில் மூன்று சொற்பதங்களை அல்லது அடிப்படை தூண்கள் என வர்ணிக்கப்படுகின்ற மனிதன், பூமி வானகம் என்பவற்றை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். வானமும் பூமியும் இரண்டு பெரிய சக்திகளாக கொள்ளப்படுகின்றன. இவை இரண்டும் அடிப்படையிலே ஒரு நெருங்கிய உறவைக் கொண்டவையாக கருதப்படுகின்றன. வானத்தை ஆணாகவும் (Yang), புவியை பெண்ணாகவும் (Yin) பார்க்கும் இந்த கோட்பாடு இவை இரண்டினதும் உறவால் பிறந்ததே படைப்பு என்றும் இந்த படைப்பிலே மனிதன் சிந்திக்கும் சக்தியை விசேடமாக கொண்டவனென்னும் கூறுகிறது.

கொன்பியூசியஸ் மனிதனுக்கே உரித்தான சிந்திக்கும் சக்தியை சாதகமாக பயன்படுத்தி மனிதனின் ஒழுக்கத்தை மையமாகக் கொண்ட தன் வாழ்க்கை முறையை வகுத்தார். ஒவ்வொரு மனிதனுள்ளும் உள்ளார்ந்த உயர்ந்த ஒரு தெய்வீகத் தன்மை இருப்பதாகவும் அது இயற்கையாகவே நன்மைத்தனம் கொண்டதாகவும் நோக்கினார். இவ்வாறு மனிதனுக்குள்ளே உறங்கிக்கொண்டிருக்கிற இத்தெய்வீகத்தன்மையை ஒவ்வொரு மனிதனும் கண்டுணர்ந்து அதன் நன்மைத் தனத்தை அனுபவிக்கும் பொழுது மனிதர்கள் இறையனுபவத்தை பெறுகிறார்கள் என்று அவர் கூறி நிற்கிறார். "உன்னையே நீ அறிவாய்" என்று தத்துவாசிரியர் சோக்கரட்டீஸ் சொல்வதைப்போல இவரும் "உன் உள்ளார்ந்த இருப்பை, தன்மையை உணர்ந்து கொள்வாய்" என்று கூறுகின்றார். இந்த செயற்பாட்டை அவர் சுய வளர்ச்சி அல்லது சுய ஏற்படுத்தல் (self cultivation) என்கிறார்.

இந்த செயற்பாட்டிற்கு ஒவ்வொரு மனிதனும் ஏனையவர்களுடன் கொள்ளும் உறவை முக்கியமாக இவர் பார்க்கின்றார். ஒவ்வொருவரும் தன்னுடைய குடும்பத்தில் உள்ளவர்களுடன், சமூகத்தில் உள்ளவர்களுடன், நாட்டில் உள்ளவர்களுடன் தன்னுடைய உறவை ஏற்படுத்தி வளர்க்கும் போது இந்த சுய வளர்ச்சி நடைபெறுவதாக கூறுகின்றார். இப்படியாக மனிதன் ஒருவன் தான் கொள்ளும் உறவிலே தன்னுள் உறைந்திருக்கும் உள்ளார்ந்த தன்மையை கண்டுணரும் பொழுது இறையனுவத்தையும், வாழ்வின் அர்த்தத்தையும் அனுபவிப்பதாக கூறுகின்றார்.

மேலும் இங்கே இறையனுபவத்திற்கு சில குறிப்பிட்ட வழிபாடுகளும் சம்பிரதாயங்களும் உதவுகின்றன. அவர்களுடைய சடங்குகளும் சம்பிரதாயங்களும், குழும வாழ்வையும் ஆழமான உறவு நிலைகளையும் நோக்கங்களாக கொண்டவையாகும். உதாரணமாக அவர்களிடையே காணப்படும் மூதாதையர் வழிபாட்டில் அனைவரும் வர்க்க பேதமின்றி மூதாதையர் மண்டபம் என்று கூறப்படும் இடத்திலே கூடுவார்கள். அங்கே அவர்கள் தமக்கு முன் இறந்தவர்களுடைய நன்மைத்தனத்தையும், ஒழுக்க குழும உணர்வுகளையும் நினைத்து போற்றி தொழுவார்கள். இப்படியாக அவர்கள் தாம் சந்திக்கின்ற இடங்களையும் நேரங்களையும் தமது சுய வளர்ச்சிக்கு உதவும் புனிதமான சந்தர்ப்பங்களாக நோக்குகிறார்கள். இவ்வாறாக மனிதன் தன்னுள் உறைந்திருக்கும் தெய்வீகத்தன்மையை கண்டுணர்வதன் மூலம் ஏனைய படைப்புக்களுடன் ஏற்கனவே இருந்த உறவு நிலையை அனுபவித்து இறுதியாக இந்த வாழ்க்கை முறையின் இலக்கான பரிசுத்த ஒருமைப்பாட்டை (sacred oneness) அடைவானென்று கொன்பியூசியஸ் கூறி நிற்கின்றார்.

முடிவாக இந்த இறையனுபவம் ஒருநாளில் அல்லது ஒரு சில நாட்களில் பெறலாம் என்று எதிர்பார்க்க முடியாது. ஆதலால் இந்த முயற்சி ஒருவரது வாழ்நாள் பூராகவும் நடைபெறுகின்ற ஒரு தொடர்ச்சியான தேடலாகவே இருக்கிறது.

**துணைநின்ற நூல்கள்:**


Mampra Thomas (ed), **Religious Experience**, Dharmaram Publication, Bangalore, 1981.

Parrinder Geoffrey, **Worship in the world's Religions**, Sheldon Press London, 1961.

James E.O. **Comparative Religions** (2nd ed), Methuen and co Ltd, London, 1969.

# தற்கால மெய்யியல் உலகில் மொழியியல் ஆய்வு

S. U. ஜெகான்

**முன்னுரை**

20ம் நூற்றாண்டின் மெய்யியல் பரிமாணம் "தற்கால மெய்யியல்" என்று வர்ணிக்கப்படுகின்ற நிலையிலே, மனிதனின் இருப்பிலே, அவனுடைய சிந்தனையிலே, அவனுடைய நடை உடை பாவனைகளிலே, கலாசார பண்பாட்டிலே இந்த புதிய மெய்யியல் பரிமாணம் தாக்கத்தை அல்லது செல்வாக்கை செலுத்தியுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. மெய்யியல் வரலாறானது நான்கு பெரும் காலப்பகுதிகளாக பிரிக்கப்படுகின்றபொழுது, மனித சிந்தனையின் "அடிப்படை ஆய்வுப்பொருளும்" அந்தந்த காலப்பகுதியின் அறிவியல் அழுத்தத்திற்கேற்ப மாறுபட்டுக் கொண்டே வந்திருக்கின்றது. அவையாவன:

1. புராதன மேலைத்தேய மெய்யியல் - அடிப்படை ஆய்வுப்பொருள் - "உலகம்".
2. இடைக்கால மெய்யியல் - அடிப்படை ஆய்வுப்பொருள் - "மனிதன்".
3. நவீன மெய்யியல் - அடிப்படை ஆய்வுப்பொருள் - "மனிதன்".
4. தற்கால மெய்யியல் - அடிப்படை ஆய்வுப்பொருள் - "மனிதனும் சமூகமும்".

இவ்வாறாக பல்வேறு காலமாற்றங்களுக்கூடாக பரிணாமம் அடைந்து வளர்ந்துள்ள இந்த மெய்யியலானது முன்னெப்போதும் இல்லாதவகையில் தற்கால உலகில் எங்கும் பரவி, வியாபித்து மனிதனின் வாழ்க்கையின் அனைத்து கூறுகளிலும் இரண்டறக் கலந்து விட்டது.

**தற்கால மெய்யியலின் முக்கியமான முறைகள்**

தற்கால மெய்யியல் தன்னுடைய அறிவுத் தேடலின் கருவிகளாக பெரும்பாலும் இரண்டு முறைகளை அடிப்படையாக கையாளுகின்றது.
1. தர்க்க புலனறிவால் ஒப்பிட்டு ஆய்ந்தறியும் முறை
2. நடைமுறை, வாழ்வியல் அணுகுமுறை

தர்க்க புலனறிவால் ஒப்பிட்டு ஆய்ந்தறியும் முறையினை தர்க்கவாதம் [logical positivism] புலனறிவாதம் [empiricism] அறிவியல்வாதம் [rationalism] எண்ணக்கருவாதம் [idealism] மொழியியல் ஆய்வு [linguistic analysis] போன்றன தமது பிரதானமான கருவியாக பயன்படுத்துகின்றன. இவற்றை பயன்படுத்திய மெய்யியல் அறிஞர்களில் இம்மனுவேல் கான்ட், பேட்றன்ட் றசல், ஜி. ஈ. மூர், ஏ.ஜே.அயர், கார்ல் பொப்பர் போன்றோரை சிறப்பாக குறிப்பிடலாம்.

நடைமுறை, வாழ்வியலூடாக மெய்யியலை அணுகி மனித வாழ்வின் பிரச்சினைகள், சந்தர்ப்பங்கள், அனுபவங்கள் என்பவற்றை மையமாக கொண்டு தற்கால மெய்யியலுக்கு புதிய பரிமாணம் கொடுத்தவர்கள் இன்னும் சிலர். அவர்களுடைய இந்த புதிய அணுகுமுறையிலிருந்து பிறந்தவைதான் வாழ்வியல் வாதம், [existentialism] மானுடவியல்வாதம் [humanism]. இந்த புதிய முறையின் முன்னோடிகளாக கீர்க்காட், ஜே.பி. சாத்றே, மார்டின் பீயூபர் போன்றோரைக் குறிப்பிடலாம்.

## மொழியியல் ஆய்வு

புதியனவற்றை நோக்கிய ஓர் அறிவியல் தேடலின் பயனாக கிடைக்கப்பெற்ற ஆய்ந்தறியும் முறையானது $20^{ம்}$ நூற்றாண்டு மெய்யியலின் புதிய வடிவம் என்றே கூறலாம். இவற்றிலே மிக முக்கியமான ஆய்ந்தறியும் முறையான "தர்க்க புலனறிவாதம்" பல தற்கால மெய்யியல் அறிஞர்களாலும் பயன்படுத்தப்பட்டு "உண்மை என்பது ஆய்ந்தறியப் பட வேண்டியது, ஆய்விற்குட்படாதது எதுவும் உண்மையாகமாட்டா" என்ற முற்போக்கு எண்ணத்திற்கு வித்திட்டது. இந்த ஆய்வு முறையின் முதலாவது ஆய்வுப் பொருளாக மனிதன் பயன்படுத்தும் "மொழி" ஆய்விற்குட்படுத்தப்பட்டதன் விளைவாக "மொழியியல் ஆய்வு" என்ற புதிய கற்கை நெறி மெய்யியலிலே புகுந்தது மட்டுமல்லாமல், பல மெய்யியல் அறிஞர்களையும் தன்பால் ஈர்த்துக் கொண்டது. மொழியியல் ஆய்வில் ஈடுபட்ட பல அறிஞர்களுடைய கருத்துப்படி மெய்யியல், மற்றும் அறிவியல் சித்தாந்தங்களில் ஏற்பட்ட குழப்பங்களுக்கும், முரண்பாடுகளுக்கும் அவற்றிலே பயன்படுத்தப்பட்ட தெளிவற்ற, பலவீனப்பட்ட மொழியே காரணம் என்பது ஆகும்.

ஜி.ஈ.மூர் என்ற அறிஞர் எந்தவொரு மனித கற்கைநெறியோ, அறிவியல் சித்தாந்தமோ, நம்பிக்கையோ தாம்தாம் உபயோகிக்கும் மொழியினை சரியான முறையில், உகந்த முறையில் தெளிவுபடுத்துவது மட்டுமன்றி முரண்பாட்டை உண்டாக்கும் வார்த்தை பிரயோகங்களை தவிர்க்க வேண்டும் என்றும் வாதாடினார். இவருடைய இந்த வாதம் பின்னர் மொறிஸ்ட்ஸ் சிலிக் என்பவர் தலைமையில் கூட்டப்பட்ட "வியன்னா வட்டத்தில்" (வியன்னாவில் நடைபெற்ற கருத்தரங்கு) பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியது. மெய்யியல் ஆய்வில் ஈடுபட்ட ஏ.ஜே.அயர் என்ற அறிஞர் எழுதிய "மொழி, உண்மை, தர்க்கம்" [Language, Truth and Logic] என்ற நூல் இரண்டு வகையான மொழிகளை கோடிட்டு காட்டுகின்றது.

1. தர்க்க ரீதியான (உண்மை/பொய் கூறக்கூடிய) மொழி [logical discourse]

2. புலனறிவாத மொழிப் பிரயோகம் [empirical assertions] (A. J. Ayre: Language, Truth and Logic)

இந்த இரண்டு வகை மொழிகள் மாத்திரமே உண்மையையும் அறிவையும் பற்றி பேசப்படக்கூடிய மொழிப்பயன்பாடுகள் என்பது தான் இப்புத்தகத்தின் சாராம்சம். இதனடிப்படையில் ஒரு வாக்கியம் பேசப்படும்போது அது தர்க்க ரீதியாகவோ அல்லது புலனறிவாலோ நியாயப்படுத்தபடக் கூடியதாக இருக்க வேண்டும். அதன் மூலமே அவ்வாக்கியம் உண்மை அல்லது பொய்ம்மை என்று உணரப்பட முடியும்.

உ+ம் :- இரண்டும் இரண்டும் நான்கு - உண்மை
எல்லா நாற்காலிகளும் மூன்று காலுடையவை - முரண்பாடு
சூரியன் குளிர்மையானது - பொய்மை

புலனறிவால் ஆய்வுக்குட்படுத்தப் படக்கூடியவையும் பொய்மை அல்லது உண்மை என்று இனங்காணப்படக் கூடியவையாக இருக்கும்.

உ+ம் :- நெருப்பு சுடும் என்ற வாக்கியம் நெருப்பில் விரலை வைப்பதன் ஊடாக உண்மை அல்லது பொய்மை என்று நியாயப்படுத்தப்பட முடியும்.

இந்த ரீதியிலே இதே சிந்தனை ஓட்டத்திலே அறிவியல் தடம் பதித்தவர் லுட்விக் விற்கென்ஸ்டைன். இவர் முன்வைத்த "படக் கொள்கை" [picture theory] மொழியியல் ஆய்வில் பரபரப்பை ஏற்படுத்தினாலும் மொழியியல் ஆய்வை மேலும் முன்நோக்கி புதிய பரிமாணங்களோடு நகர்த்தி சென்றது. இந்த "படக் கொள்கை"யின்படி "நான் பேசும் வாக்கியம் படம் போன்று நிஜத்திலே என்முன்னே இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் நான் பேசுவது அர்த்தமற்றது".

இவ்வாறான மொழியியல் ஆய்வின் அதிரடி அதிதீவிர வளர்ச்சியால் பல மெய்யியல், சித்தாந்த, அறிவியல், மனித நம்பிக்கை கோட்பாடுகள் ஆட்டம் கண்டன. பலவிதமான முரண்பாடுகள் தோன்றலாயின; அவையாவன:

1. விஞ்ஞானத்திற்கும், பௌதீகம் கடந்த கோட்பாட்டிற்குமிடையிலான முரண்பாடுகள்
2. தர்க்க ரீதியான வாதங்களுக்கும் தர்க்கரீதியற்ற வாதங்களுக்குமிடையிலான முரண்பாடுகள்
3. நியாயப்படுத்தப் படக்கூடியவற்றிற்கும் நியாயப்படுத்தப்பட முடியாதவற்றிற்கும் இடையிலான முரண்பாடுகள்
4. கட்புலனுக்குட்பட்டவைக்கும் கட்புலனுக்குட்படாதவைக்கும் இடையிலான முரண்பாடுகள்
5. நடைமுறை உண்மைகளுக்கும் கோட்பாட்டு உண்மைகளுக்குமிடையிலான முரண்பாடுகள்

இப்படியான முரண்பாடுகளினூடாக ஏற்பட்ட குழப்பங்கள் மனித ஒழுக்க கோட்பாடுகளிலும், மத நம்பிக்கைகளிலும் அவற்றின் உறுதிப்பாட்டில் தளர்வை உண்டுபண்ணின. உதாரணமாக "கடவுள் மனிதனோடு பேசினார்" என்ற வாக்கியம் அர்த்தமற்றதொன்றாக (உண்மை பொய்ம்மை கூறப்படமுடியாது) கருதப்படலாயிற்று. "கடவுள் மனிதனை அன்பு செய்கிறார்" என்பது வெறும் பொழுதுபோக்குப் புராணமாக மாறியது. இவையனைத்தையும் கடந்து "கடவுள் இருக்கிறார்" என்ற வார்த்தைப் பிரயோகமே மனித அறிவியல் அகராதியில் இருந்து அடிபட்டு நிரூபிக்கப்பட முடியாத வெறும் வெற்றுக் கதையாக மாறியது. இதற்கு தீர்வு என்ன?

"பிரச்சினை எங்கே ஆரம்பமாகிறதோ அங்கேயே தீர்வும் இருக்கின்றது." மொழியியல் ஆய்வின் அடிப்படையான ஆய்ந்தறியும் முறையே அது பூதாகரமாக எழுப்பி விட்ட மொழியியல் பிரச்சினைக்கும் தீர்வாக மாறுகின்றது. ஆய்ந்தறியும் அணுகுமுறையினூடாக மொழிகளை அவற்றின் நியாயத்தன்மைகளை ஆராயும்போது எல்லா மொழிகளும் ஒரே வகையில் அல்லது வகுப்பில் அடுக்கப்பட்டு நோக்கப்பட முடியாதென்ற தன்மையும், ஒவ்வொரு விதமான மொழியும் அந்தந்த சூழ்நிலை, எதிர்பார்ப்புக்கள், புரிந்துணர்வுகள், கலாசாரங்கள், வாழ்வியல் பின்னணி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற உண்மையும் புலப்படுகின்றன. உதாரணமாக கட்டட வேலை செய்யும் மேசன் தன் சக ஊழியனிடம் "கலவை" என்று கேட்கின்ற போது அந்த கலவை உருவாக்கப்பட்ட சீமேந்து, மண், அவற்றின் அளவு பரிமாணங்கள், அதனை சென்று எடுத்து வந்து கொடுக்கும் செயல் அனைத்தும் அந்த ஒரு வார்த்தையினுள் அடங்கியுள்ளது. அவன் குறிப்பிடுகின்ற "கலவை" பற்றிய சரியான அறிவை ஒரு மருந்துக் கலவையில் ஈடுபடும் பணியாளனிடம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இவனுடைய அறிவிற்கும், சொற்பாவனைக்கும், தொழில் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கும் "கலவை" என்பது வேறு அர்த்தத்தையே கொடுப்பதாக அமையும்.

இந்த வகையான கருத்துக்கு வலுவூட்டியவர்களுள் ஜே.எச்.றண்டல் மிகவும் சிறப்பு வாய்ந்த இடத்தை வகிக்கின்றார். இவர் எழுதிய "மேலைத்தேய சமயங்களில் அறிவின் பங்கு" [The Role of Knowledge in Western Religion] என்ற புத்தகமானது எவ்வாறு "மனிதனது மத மொழி" [religious language] ஒரு சிறப்பான மொழி வகையை சார்ந்ததாகவும், அடையாளங்களுடாக ஆழமான உண்மைகளை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல் கொண்டதாகவும் காட்டுகின்றது. "கடவுள் மனிதனை அன்பு செய்கிறார்" என்ற வாக்கியம் மனித மொழியிலே வெளிப்படுத்தப்பட்ட மனித அறிவிற்கெட்டாத ஆழமான அனுபவம். மனிதமத மொழியானது அர்த்தமற்றதன்று. மாறாக அது

மனித அறிவிற்கப்பாற்பட்ட ஒரு புதிய வகுப்பை சார்ந்தது என்பதே அர்த்தம்.

உ+ம்:- "கடவுள் மனிதனோடு பேசினார்" (சாதாரணமாக மனித அறிவின்படி ஒருவர் பேசுவதை மற்றவர் எவ்வாறு கேட்கிறார் என்று ஆராய்ந்தோமானால், வயிற்றிலிருந்து எழும்பும் ஓசை கழுத்தினூடாக பயணித்து, மூளையின் பணிப்பின் பிரகாரம் குரல் நாண்களை அதிரவைத்து நாக்கு, பல், உதடுகளின் வழியாக வெளிக்கிளம்பி, வளிமண்டலத்தில் பயணம் செய்து மற்றவரின் காதின் செவிப்பறையில் அதிர்வலைகளை உருவாக்கி மூளையின் செயற்பாட்டின்மூலம் உரிய செய்தியாக மாற்றப்படுகின்றது.) இப்படியான படிமுறைகளை இந்த "கடவுள் மனிதனோடு பேசினார்" என்ற வாக்கியத்தில் பிரயோகித்து ஆய்விலீடுபட முடியாது. அரூபியாகிய கடவுளிடம் இவ்வாறான பேசும் புலனுறுப்புக்களை எதிர்பார்ப்பது முட்டாள் தனம்.

எனவே மனிதனின் மத, ஒழுக்க மொழியானது மனிதனை ஒரு உயர்ந்த பௌதீகம் கடந்த அனுபவத்திற்கு இட்டுச் செல்வது மாத்திரமல்ல மனிதனை ஒரு கொள்கைப்பிடிப்புள்ள உயர்ந்த மாதிரிக்கு அழைக்கின்றது என 'பிறேய்த்வெய்த்' குறிப்பிடுகின்றார். மனித உளவியலில் பெரும் செல்வாக்கு செலுத்தும் மத நம்பிக்கையானது மொழி வடிவம் பெறுகின்றபோது மனிதனை உளவியல் மேடைக்கு அழைத்துச் சென்று துல்லியமான, அழுத்தமான மன உணர்வுகளை அடையாளங்களாக, குறியீடுகளாக வெளிப்படுத்தும் தன்மை வாய்ந்ததாக திகழ்கின்றது.

லுட்விக் விற்கென்ஸ்டைனினால் முன்வைக்கப்பட்ட மொழி-விளையாட்டு கோட்பாடு [language game theory] டி.சற். பிலிப்ஸினால் கையாளப்பட்டு புதிய பரிமாணங்களை அடைந்தது. இவர்களது கருத்துப்படி "மனிதன் தன்னுடைய பல்வேறுபட்ட அறிவியல், சமய, நம்பிக்கை, ஒழுக்க கோட்பாடுகளை, கொள்கைகளை விளக்க வெவ்வேறாக, தனித்துவமான சொல்லாட்சியோடு மொழியினை பயன்படுத்துகின்றான்." இது ஒருவிதமான விளையாட்டு. இந்த விளையாட்டைப் புரிந்துகொண்டு, சரியான முறையில் ஆடவேண்டுமாயின், ஒவ்வொரு விளையாட்டு விதிகளும் அதன் பின்புலங்களும் சரியான முறையில் அறிந்துணரப்பட வேண்டும்.

உ+ம் :- கடவுள் ஆதியில் ஆதாம், ஏவாள் என்ற முதல் மனிதரை படைத்தார் என்ற வாக்கியமும் குரங்கிலிருந்து இயைபாக்கத்தினூடாக மனிதன் பரிணாமக் கொள்கையின்படி உருப்பெற்றான் என்ற வாக்கியமும் வெவ்வேறான மொழி விளையாட்டு விதிகளையும் பின்புலங்களையும் சார்ந்தவை என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

இறுதியாக பல குழப்பங்களுக்கும், முரண்பாடுகளுக்கும் மொழியியல் ஆய்வானது காரணமாக அமைந்திருந்தாலும் உண்மையிலேயே இது தற்கால மெய்யியலின் புதிய, சுவாரசியமான, அறிவை மேலும் கூர்மைப்படுத்த கூடிய அறிவியல் முன்னேற்றமாகவே கருதப்படவேண்டும். மனித மொழியின் வரையறுக்கப்பட்ட தன்மைகளை, குறைபாடுகளை எடுத்தியம்புவது மாத்திரம் இவ்வறிவியல் முன்னேற்றத்தின் நோக்கமல்ல. மாறாக மனித மூளையின் கூர்மையான விமர்சனத்தின் நிதர்சனமாகவும், மனித மூளை இன்னமும் அறிந்திராத அறிவியல் இரகசியங்களை நோக்கிய ஒரு காத்திரமான முன்னோக்கிய ஒரு நகர்வாகவும் இது அமைகின்றது.

**துணைநின்ற நூல்கள்:**


1. *Summa Theologica*, I,q.13, art,5.
2. THOMAS DE VIO, The Analogy of Name, Pittsburgh: Duofuesne University Press, 1959.
3. A. J. AYRE, Language, Truth and Logic.
4. RANDELL, The Role of knowledge in western Religion, Boston: Becoun Press, 1958.
5. D. Z. PHILLIPS, The Concept of Prayer.


★ அவநம்பிக்கையை விடத் தனிமையான தனிமை வேறெது உண்டு?

- ஜார்ஜ் சலியட்

★ அறிவற்ற அச்சம், ஆபத்தை இரட்டிக்கிறது.

- தாமஸ் ஃபுல்லர்

★ யாவற்றிற்கும் மேலாக நீ உன்னையே மதித்துப் போற்று.

- பைத்தேகரஸ்

# சமய மெய்யியலின் இயல்பும் நோக்கும்

லூா். மேசி சுஜந்தினி

தொன்று தொட்டு சமயத்தையும், சமய அனுபவத்தையும் மக்கள் முக்கியமானதாகக் கருதி வருகின்றனர். சமயமே அறிவுத்துறைகள் அனைத்துக்கும் உயிர் நாடியாகவும் அறிவின் பிறப்பிடமாகவும் அமைந்துள்ளது என்பதை அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளுவர். சமயம் என்பதில் தத்துவம், இறையியல், வழிபாடுகள் அல்லது மரபுகள் ஆகிய விடயங்கள் அடங்கியுள்ளன.

மெய்யியல் அறிவுத்திறனை மேம்படையச் செய்கின்றது. பொதுவாழ்வில் அறிவுதான் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. ஆனால் சமயம் அறிவைவிட நம்பிக்கையினையே உயர்ந்ததாகக் கொள்ளுகின்றது. எனினும் சமய மெய்யியல் அறிவினை முதல்ப்படியாகவும் நம்பிக்கையை இரண்டாம்படியாகவும் கொண்டிருக்கின்றது. இந்தப் படிநிலைகளை அறிதலும் உணர்தலும் எனக் கொள்கின்றனர். சமய மெய்யியலாளர்கள் நம்பிக்கையே உணர்தலுக்கு வழிசமைக்கின்றது. நம்பிக்கை பற்றி அதிக அக்கறை எடுக்கின்றனர். மெய்ப்பிக்காமலே ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைகளை அடிப்படையாகக் கொண்டதே சமயத்தின் இயல்பாகும். இந்தச்சமயம், சமய நம்பிக்கைகள், சமய நடைமுறைகள் என்ற இரு முக்கிய உள்ளீடுகளை கொண்டிருக்கின்றது. அறிதலின்வழி உணர்வும், உணர்தலின் வழி நம்பிக்கையும் பெறப்படுகின்றது என்பதால் சமய மெய்யியலாளர்கள் சமய நம்பிக்கைகளைக் குறித்து கூடுதலான அக்கறை எடுத்துக் கொள்கின்றனர்.

ஒருவரிடம் சமயம் பற்றிய எண்ணம் இயல்பாகவே உருவாகியுள்ளது என சமய மெய்யியல் கூறுகின்றது. அதாவது இயல்பிலேயே ஏதோ ஒன்று அவரை சுவர்க்க நிலையினை அடைய வேண்டும் எனத் தூண்டுகின்றது. இத்தகைய எண்ணம் உடன்பிறந்த ஒன்றாகக் காணப்படுவதுடன் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட சமயங்கள் கடவுளை குறித்ததோர் சிந்தனையை ஒவ்வொருவரிடத்திலும் இயல்பாகத் தோற்றுவிக்கின்றன என்று சமய மெய்யியலாளர்கள் கூறுகின்றனர். தூய்மையான ஆன்மா துன்பமான உலகில் இருப்புக்கொண்டுவிட்டது இதனால் அதனுள் அமிழ்ந்து கிடக்கின்ற மேம்பாட்டு சிந்தனைகள் ஒருவரை ஆன்மீக நாட்டத்தில் ஈடுபடுத்துகின்றது. அந்த ஆன்மீக நாட்ட வழிகாட்டலே சமயமாகும் என்று மேலைத்தேய, கீழைத்தேய சமய சிந்தனைகள் சமயத்தை வரையறுக்கின்றன.

ஆதிகாலத்தில் இயற்கைக்குப் பயந்த மனிதன், இயற்கை அனர்த்தங்களில் இருந்து தப்பித்துக்கொள்ள இயற்கையைத் தெய்வமாக வழிபட்டான். பின்னர் பல கடவுட் கொள்கைகள்

உருவாகின. அதன்பின் இக்கொள்கைகள் காலப்போக்கில் ஒரே கடவுள்க் கொள்கையாக உருப்பெற்றது. இவையே சமயத் தோற்றம் பற்றிய பொதுவான கருத்தாகும். சமய உளவியல், சமயம் தோற்ற அடிப்படையாக அமைந்த காரணங்களை ஆராய்கின்றது. சமய இயல்பூக்கம் மனிதனிடம் இருக்கின்றது எனவும், அறநெறி காக்கவும், ஒழுக்கத்தைப் பேணவுமே சமயம் எழுந்துள்ளது என்பது ஒருசாரார் கருத்து. அச்சமும், குற்ற உணர்வுமே சமயப் பிறப்பிற்கு காரணம் என்பது மறுசாரார் கருத்து. குழந்தை உளவியல் ஆய்வின்படி சிறுவயதில் தந்தை, தாய் இருவர் மீதும் கொண்ட விருப்பு, வெறுப்பு சமயத்தினை உருவாக்கியது என்று சமயம் பற்றிய உளவியலில் புறொய்ட் கூறுகின்றனார். இயற்கையில் உள்ள பலசக்திகளை மனிதன் சில செயற்பாடுகளின் மூலம் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையினால்தான் சமயம் தோற்றம் பெற்றது என மானுடவியலாளர்கள் கருதுகின்றனர். மேலும் இவர்கள் சமயம், வழக்கங்களிலிருந்து வந்தது என்றும் அவ்வழக்கமே ஆற்றல் மிகுந்த சக்தியாகவும் திகழ்கின்றது எனக் கூறுவதோடு முற்கால, இக்கால மதங்களில் காணப்படும் சடங்குகளின் உண்மையைக் கொண்டு சடங்குகளைக் கொண்ட வழக்கங்களுக்கும், வழக்காறுகளுமே சமயத்தின் ஆரம்பம் என்று கூறுகின்றனர்.

இவ்வாறு தோற்றம் பெற்ற சமயமானது மனிதனுள் ஊடுருவி அவனது நடத்தையைக் கட்டுப்படுத்தி மனித வாழ்வை ஒழுங்கமைப்பதிலும் சமூக மேம்பாட்டை ஏற்படுத்துவதிலும் பெரும் பங்கு வகிக்கின்றது. ஒழுக்க வாழ்வையும் அதனூடாக சமூக மேம்பாட்டையும் இலட்சியமாகக் கொண்டுள்ள சமயங்கள் ஒவ்வொன்றும் தமக்கேயுரிய கொள்கைகள், வழிபாட்டு முறைகள் நடைமுறைகள் என்பவற்றைக் கொண்டுள்ளன. இவை எவரது கண்காணிப்புமின்றி, வற்புறுத்தலுமின்றி இயல்பாகவே நடைபெறுகின்றன. இச் செயற்பாட்டுக்கு நம்பிக்கையே அடித்தளமாகும். இத்தகைய சமய நிலைப்பாடும் அதன்மீதான நம்பிக்கைகளும்எவ்வாறு ஏற்பட்டன என்பது பற்றி சமய மெய்யியல் ஆராய்கின்றது.

மனிதன் தன்னை ஆற்றல் குறைந்தவன் என எண்ணும் அதே வேளை தனக்குத் துணையாக ஆற்றல் உள்ள ஒன்று இருப்பதாக உணருகின்றான். மனிதன் தன்னிடம் நிறைவு இல்லை என்பதைக் கண்டு நிறைவினைத் தேடும்போது ஏதோ ஒரு சக்தி தன்னை இடைவிடாமல் இழுத்துக்கொண்டிருக்கின்றது என்று உணர்ந்து கடவுள் என்ற மெய்ப்பொருள் இருக்கத்தான் வேண்டும் என ஏற்றுக்கொள்கிறான். சமய நம்பிக்கை மனிதனை இலட்சிய உள்ளத்தை தேடிக்கொள்ள தூண்டுகின்றது.

சமய மெய்யியலானது சமயத்தினை ஒரு அறிவாகப் பார்க்கின்றது. அதே வேளை சமயமே அறிவுத் துறைகள் அனைத்திற்கும் உயிர்நாடி எனவும் அறிவின் பிறப்பிடம் எனவும் பலர் ஏற்கின்றனர். ஆனால்

காலப்போக்கில் விஞ்ஞான ஆராய்ச்சி மிகுந்து வளர மக்கள் சமய அனுபவத்தின் தன்மை பற்றியும், அதனால் உண்டாகும் நன்மைகள் பற்றியும் ஆராயத் தொடங்கினர். மெய்ப்பிக்காமலே ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதே சமயம் என்ற நிலையில், விஞ்ஞான ஆராய்ச்சி வளர்ந்தபோது காரண காரிய தொடர்பு எனும் கருத்து முதன்மை பெற மேற்கூறிய அடிப்படை சமய நம்பிக்கைகள் சரியானவை தானா? எனும் ஐயம் எழுந்தது. இதனால் சமயம் பற்றிய ஆய்வினை மெய்யியல் தொடங்கியது. இந்தவகையில் சமய மெய்யியலானது, மேற்குறிப்பிட்ட நம்பிக்கையை அறிவாக நோக்குதல் வேண்டும் எனவும், இவை கற்பனையானவை அல்ல எனவும்; விதி, கொள்கைகளை கொண்ட நியாயித்தலை அடிப்படையாகக் கொண்டு மேம்பாடடைதலை நோக்கமாகக் கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தப்படுகின்றது.

சமயம் பற்றி ஹெர்பாட்டர் பிரபு கூறுகையில் "உயர்ந்த ஒரு பொருள் உண்டு என்கின்ற நம்பிக்கை எல்லாவற்றுக்கும் முதற் காரணமாயிருக்கின்றது; எனவே இப்பொருளை வழிபடல் மனிதன் கடமை; அதன் மூலம் அறமும் அன்பும் ஏற்படும். எங்கெல்லால் புனித உணர்ச்சி தோன்றுகின்றதோ அங்கெல்லாம் சமயம் இருக்கின்றது" என்கிறார். ஆகவே சமய மெய்யியலின் நோக்கு மனிதனின் மனதை செம்மைப்படுத்தி உண்மையான மனநிறைவை அடைந்து அவனை உயர்ந்த நிலையில் வைக்கம் பாடுபடுதலாகும். இவ்வாறு சமய மெய்யியலானது நம்பிக்கை வெளிப்பாட்டை தனது இயல்பாக உள்ளடக்கி அதன் மூலம் மனித வாழ்வின் மேம்பாடு எந்த அளவுக்கு சாத்தியம் என்பது பற்றிய நோக்கினை ஆராய்கின்றது.

**துணைநின்ற நூல்கள்:-**

1. கலைக் களஞ்சியம், IV, ப.447-451.
2. "உறவுகள்" சஞ்சிகைகள்

★ வதனம் எழிலுடையதாய் இருக்கும்போது, வண்ணங்கள் தேவையில்லை.

- **ஜான் லைலி**

★ நம் அறியாமை பற்றி அறியாத நிலையே, அறியாமையின் அவக்கேடு.

- **ஏமாஸ் பிரான்ஸன்**

# யோண் லொக் (1632 – 1704)

-ஆ. ஜஸ்ரின்



யோண் லொக் 1632ம் ஆண்டு ஆவணி மாதம் 29ம் திகதி இங்கிலாந்தில் (B)பிறிஸ்ரல் எனும் ஊரில் பிறந்தார். இவர் அனுபவ வாதத்தின் தந்தை என அழைக்கப்படுகின்றார். ஒக்ஸ் பேர்ட் பல்கலைப் கழகத்தில் கல்வி கற்ற இவர் இளமானிப் பட்டத்தை 1655ம் ஆண்டும் தொடர்ந்து முதுமாணிப் பட்டத்தை 1658ம் ஆண்டும் பெற்றுக் கொண்டார். பாரீசில் 1677ம் ஆண்டு தொடக்கம் இவர் தனது மாணவர்களுக்கு எண்கணிதம், தர்க்க சாஸ்திரம் என்பவற்றைக் கற்பித்தார்.

1666ம் ஆண்டு இவர் எதேச்சையாக பிரபு அஸ்லிக்கு அறிமுகமானார். இவருடைய வாழ்க்கை முறையாலும், ஆழுமையினாலும் மிகவும் கவரப்பட்ட பிரபு இவரைத் தனது நண்பராகவும் அரண்மனை மருத்துவ ஆலோசகராகவும் ஏற்படுத்தினார். இதன் மூலம் அரசபரம்பரையினருக்குத் தனது கல்விச் செல்வத்தை அள்ளிக் கொடுக்க ஆரம்பித்தார். இவரது வாழ்க்கையில் பெரும் பகுதி உடல் நோயுடன் கழிந்தது. ஆனாலும் இவர் எழுபத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்தார். இவர் கடும் நோயுற்று 1704ம் ஆண்டு இறந்தார்.

இவர் அனுபவத்தை முதன்மையானதாக, அடிப்படையானதாகக் கொண்டு தனது மெய்யியற் கொள்கைகளை முன்வைத்தார். "அறிவனைத்தும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது" என்னும் கொள்கையே அனுபவவாதம் ஆகும். "கருத்துப் படிவங்களும், தொடர் எண்ணக் கூறுகளும் மனித மனத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருப்பதால் மனமானது உலகைக் காணும்போது அது அனுபவத்தை நாடவேண்டியதில்லை; மாறாக ஏற்கனவே கொண்டுள்ள கருத்தினை நினைவு கூருதல் மட்டுமே தேவைப்படுகின்றது; மாறாக அனுபவத்தால் எதையும் தெரிந்து கொள்வதில்லை" என்ற கருத்தியற் கோட்பாடுகளுக்கு எதிரானதே அனுபவவாதக் கோட்பாடாகும்.

இவ் அனுபவத்தைக் குறித்து லொக் கூறும்போது மனித மனமானது "எதுவுமே எழுதப்படாத வெள்ளைத் தாள்" – Tabula Rasa, "தனிக் குறியீடு ஏதும் சிறிதும் அற்றது" என்கிறார்.

லொக்கினால் கூறப்படும் கருத்துப் படிவங்கள், எண்ணங்கள் அல்லது கருத்து என்னும் பதமானது பிளேட்டோவினுடைய அணுகு முறையைச் சார்ந்தது அல்ல; மாறாக இங்கு கருத்துப் படிவங்கள் என்பது உடனடியான அறிவு உணர்ச்சி, சிந்தனை அல்லது புரிந்து கொள்ளுதல் என்பவற்றைக் குறித்து நிற்கிறது.

எமது அறிவானது நிச்சயமானதாக இருக்க வேண்டுமானால் அது உலகில் இருந்து பெறப்பட்டதாகவே இருக்க வேண்டும் என்கின்றார். இவர் அறிவின்மூலம், இயல்பு, வலிதுடைமை ஆகியன பற்றி விரிவாய் ஆராய்ந்தார். அனுபவங்களூடாக நாம் அறிவினைப் பெறுகின்றோம் எனக் கூறும் இவர், பெறப்படும் அறிவு இரு அம்சங்களில் தங்கியுள்ளது என்கிறார். அவை முதல் நிலைப்பண்புகள் (primary qualities), வழிநிலைப் பண்புகள் (secondary qualities) ஆகும்.

இவருடைய அனுபவவாதத்தைப் பின்பற்றி அதை வளர்த்துச் சென்றோர் வரிசையில் பிரித்தானிய அனுபவ வாதிகளான ஜோர்ஜ் பேக்ளி, டேவிட் கியூம் என்போர் பிரதானமாக இடம் பெறுகின்றனர்.

**ஒரு வாசகரிடமிருந்து...**

இந்தக் கடிதத்தினை மிகவும் மகிழ்ச்சியுடன் உங்களுக்கு எழுதுகிறேன். இங்கு என்னைப் பற்றி அறிமுகம் செய்வது எனது கடமை என எண்ணுகிறேன்.

நான் கண்டி மறைமாவட்டத்தினைச் சேர்ந்தவன். இப்போ கண்டி தேசிய குருமடத்தில் 1ம் வருட மெய்யியல் மாணவனாக மெய்யியல் பயில ஆரம்பித்துள்ளேன். உங்களுடைய "மெய்யியல் நோக்கு" என்னும் சஞ்சிகையினை வாசிப்பதனூடாக பல விடயங்களை அறிய முடிகிறது என்று சொல்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உயர்வாக பாராட்டப்படவேண்டிய, மெச்சத்தக்கதொரு படைப்பினை ஒழுங்காக வாசிப்பவன் என்று கூறுவதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. அநேகமாக இங்குள்ள தமிழ் மாணவர்கள் அனைவரும் இச்சஞ்சிகையினை விரும்பி வாசிக்கிறார்கள். இது உண்மையாகவே போதுமானளவு மெய்யியல், உளவியல் சிந்தனைகளை எமக்குத் தருகிறது.

**S. பற்றிக்**
**1ம் வருட மெய்யியல்**
**மெய்யியல் துறை**
**தேசிய குருமடம் கண்டி.**

# தத்துவம் - விஞ்ஞானம் - சமயம்: ஓர் ஒப்பீடு

பா. கிறிஸ்ரி நிமலராஜன்

## அறிமுகம்

உலகின் உயிருள்ளவை உயிரற்றவை அனைத்தும் அடிப்படையில் மேற்கூறப்பட்ட மூன்று வகையில் ஒன்றிற்குள் உள்ளடக்கப்படுகிறது. ஒரு பொருளோ அல்லது கொள்கையோ அல்லது சிந்தனையோ எதுவாக இருப்பினும் அது ஏதோ ஒருவகையில் தத்துவம் சார்ந்ததாகவோ அல்லது விஞ்ஞானம் சார்ந்ததாகவோ இல்லையேல் சமயம் சார்ந்ததாகவோ நிச்சயம் அமைகிறது. இந்த வகையில் மனிதர் இயற்கையாகவே தனித்துவம் வாய்ந்தவராக சமூகப் பிராணியாகவும் இருப்பினும், இம்மூன்று பிரிவினுள்ளும் உள்ளடக்கப் படுகின்றார். மனிதர் இம் மூன்று வகையான உண்மை நிலைகளாலும் பெரும்பாலும் செல்வாக்குச் செலுத்தப்படுகின்றனர். மனிதருடைய வாழ்க்கை இம் மூன்றையும் அடிப்படையாகக் கொண்டே கட்டி எழுப்பப்படுகிறது. இருப்பினும் தனித்து விஞ்ஞானமும், தனித்து சமயமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மனிதரை உண்மை நிலையிலிருந்து ஒரு மாறுபட்ட நிலைக்கு இட்டுச் செல்கிறது. அதாவது விஞ்ஞானமானது பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் மனிதரை இயற்கை நெறிகளிலிருந்தும், அடிப்படை சமூகக் கொட்பாடுகளிலிருந்தும் பிறழ்வுபட வழிவகுக்கிறது. இதே போல் சமயம் பல்வேறு சந்தர்ப்பங்களில் மனிதரை உண்மையான யதார்த்தமான நிலைகளை உணர்ந்துயரவிடாது தடைக்கல்லாக அமைகிறது. மதவாதக் கோட்பாடுகள் பல்வேறு சூழ்நிலைகளில் மனிதரைக் குருடாக்குகின்றது. இந்த நிலையிலேதான் "தத்துவம்" ஒரு பாரிய பங்களிப்பை அளித்து நிற்கிறது. விஞ்ஞானத்தையும் சமயத்தையும் இணைக்கும் ஒரு பாலமாகச் செயற்பட்டு மனிதரை ஒரு நடுநிலையான பாதையில் இட்டுச் செல்கிறது. மனிதர் மனிதராக வாழ தத்துவம் மூலைக்கல்லாக அமைகிறது. ஒவ்வொரு மனிதரும் கல்வியறிவுள்ளவராயினும் சரி, கல்வியறிவற்றவராயினும் சரி தம்முடைய வாழ்க்கையில் ஒரு சில தத்துவங்களைத் தமதாக்கிக் கொண்டுள்ளனர். (Each one has his/her own philosophy) இவ்வகையான தத்துவங்களே அவரது சிந்தனையைத் தூண்டும் அடிப்படைளாக அமைகின்றன. சமயம், விஞ்ஞானம் என்ற இரு வேறுபட்ட துருவங்களில் மித மிஞ்சிப் போகவிடாது ஒவ்வொருவருக்கும் கடிவாளமாக அமைகிறது தத்துவம். அதே நேரம் ஒவ்வொன்றையும் அலசி ஆராயும் அணுகுமுறைக்கு வித்திடுகிறது இந்த தத்துவம். இந்த வகையில் சமயம், விஞ்ஞானம், இவற்றின் ஒருமைப்பாடு; எங்கு முரண்படுகிறது; எவ்வாறு தத்துவம் இவ்விரு துருவங்களையும் இணைக்க வழிசமைக்க முடியும் என்பவற்றை அலசி ஆராய்வோம்.

## விஞ்ஞானம்

விஞ்ஞானம் என்பது நடத்தைகளையும், அடிப்படை அம்சங்களையும் அலசி ஆராய்கின்ற ஒருவகையான இயல். இந்த இயலானது புலன்களால் உணரப்படக்கூடிய விடயங்களை உள்ளடக்குகிறது. பொதுவாக விஞ்ஞானமானது இயற்கை விஞ்ஞானமெனவும், சமூக விஞ்ஞானமெனவும் இரண்டு வகைப்படுகிறது. உண்மையில் விஞ்ஞானம் ஒரு யதார்த்த நிலை அடிப்படை நோக்குடனேயே செயற்படுகிறது. ஆனால் அவ்வாறான யதார்த்தமான நிலையை அடையும் படிமுறை [process] தனித்துவமானது: அவதானம் [observation] அனுபவம் [experience] செயன்முறை [experiment] இறுதியான விளைவு [conclusion/truth] என்பனவே இப்படிமுறையாகும். இந்தச் செயன் முறையானது, அவதானத்தையும் செயன்முறையையும் அடிப்படையாகக் கொண்டமையால் விஞ்ஞானம் பல நன்மைகளுக்கு வித்திடுகிறது. உதாரணமாக, விஞ்ஞானத்தில் மூடநம்பிக்கை [supertitions beliefs[ என்ற வார்த்தைப் பிரயோகத்திற்கே இடமில்லை. அதேபோல் விஞ்ஞானத்தில் “பரம இரகசியம்” [mystery] என்ற பதம் பிரயோகிக்கப்படவே முடியாது. ஏனெனில் விஞ்ஞானம் எல்லாவற்றையும் விளக்கக் முற்படுகின்றது. இதுபோல் விஞ்ஞானமானது மனிதருடைய அறியாமை [ignorance], சந்தேகநிலை [skepticism] என்பவற்றைத் துல்லியமாகத் துடைத்தெறிகிறது. இவ்வாறாகப் பல நன்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள விஞ்ஞானம், மனிதருடைய வாழ்க்கையின் அடிப்படை அம்சமாகத் திகழ்கின்ற “ஆன்மீகம்” [spirituality] பற்றி முற்றிலும் அக்கறைகொண்டிராமல் அதை அசட்டை செய்கிறது. இதைவிட பல்வேறுபட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களும் முன்னேற்றங்களும் மனிதருடைய வாழ்வை இலகுவாக்கும் அதே வேளை, அதை சீரழித்து சின்னாபின்னப் படுத்துவதிலும் தவறாமல் ஈடுபடுகின்றன. மனித வாழ்வு அறநெறி, ஒழுக்கநெறி தவறி வாழப்படுவதற்கு விஞ்ஞானம் காரணமாகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மனிதனது சக்திக்கு அப்பாற்பட்ட எல்லாவற்றினதும் உருவாக்கத்திற்குக் காரணமாக இருக்கும் ஒரு சக்தி உண்டு என்பதையே முற்றுமுழுதாக மறுக்கும் அளவிற்கு மனிதருடைய சிந்தனையைத் தூண்டும் வகையில் விஞ்ஞானம் மாறிக்கொண்டே செல்கிறது.

## சமயம்

சமயம் பொதுவாக சடங்குகள் ஏதாவது ஒரு வித மத அனுஷ்டானங்கள், சமூகத்தடைகள் [taboos/inhibitions] என்பவற்றோடே அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறது. அத்தோடு இது வழமையில் செய்யப்படவேண்டியவை, செய்யப்படக் கூடாதவை என மனிதருக்கு வகுத்துக் கொடுக்கப்பட்டவற்றை அடித்தளமாகக் கொண்டுள்ளது. சமயத்தைப் பொறுத்தவரையில் உலகில் பல மதங்கள் காணப்பட்டாலும், எல்லா மதங்களும் உண்மையை அடையவே

வழிகாட்டுகின்றன. ஆனால் இந்த மதம் காட்டும் உண்மையை அடையும் வழி [process] விஞ்ஞானத்தைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டது. இது ஒவ்வொருவருடைய கடவுள் அனுபவத்தையும் மையமாகக் கொண்டது. அத்தோடு ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட உள்ளார்ந்த வாழ்க்கையோடு தொடர்புகொண்டுள்ளது. எனவே மதம் காட்டும் வழி ஒரே மாதிரியாக இருந்தாலும் உண்மையை அடையும் வழி ஒருவருக்கொருவர் வேறுபடுகிறது. ஏனெனில் கடவுள் அனுபவமும் தனிப்பட்ட உள்ளார்ந்த வாழ்க்கையும் ஒருவருக்கொருவர் வேறுபடுகிறது.

சமயத்தைப் பொறுத்தவரையில் இது ஏதோ ஒருவகையில் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உண்மையில் ஒருவர் கடவுள் நம்பிக்கையற்றவனாக இருப்பினும் அவருடைய வாழ்வில் கூட மதம் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தாவிடினும், மறைமுகமாகவேனும் செல்வாக்குச் செலுத்திக்கொண்டேயிருக்கிறது. மதம் உண்மையை அடையும் ஒரு மார்க்கமாகச் செயற்படுவதால் இது மனிதரை ஒழுக்க நெறி பிறழாது மனித மாண்புடனும், விழுமியங்களுடனும் வாழத்தூண்டுகிறது. இதைவிட மேலாக மனிதரை இறைவனுடனும் ஏனையோருடனும் ஒன்றிணைக்கும் பாலமாகச் செயற்படுகிறது. அதேவேளை சமயம் சில சந்தர்ப்பங்களில் மனித வளர்ச்சிக்கும், அறிவியல் விருத்திக்கும் பல்வேறு ஆராய்ச்சிகளுக்கும் தடையாக அமைகிறது. மனிதரை ஒரு சில உண்மைகளைப் பார்க்க முடியாதபடி குருடாக்குகிறது. ஒரு சில மூடநம்பிக்கைகள் மனிதர் மத்தியில் பரப்பப்பட துணை போகிறது. ஒரு சில உண்மைகளை மூடிமறைக்கிறது. விளக்கம் கொடுக்க முடியாமல் "பரம இரகசியம்" [mystery] என்ற போர்வையில் மூடி மறைக்கிறது. இவ்வாறாக மதம் பற்றி தீமைகளையும், நன்மைகளையும் அடுக்கிக் கொண்டு செல்ல முடியும்.

## விஞ்ஞானமும் சமயமும்

விஞ்ஞானமும் சமயமும் இரு வேறுபட்ட, எதிரும் புதிருமாகச் செயற்படுகின்ற இரு துருவங்களாக இருக்கின்ற போதிலும் மனிதருடைய வாழ்க்கையில் இவ்விரண்டுமே பல்வேறு வழிகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பாக விஞ்ஞானம் ஆராய்ச்சி என்கின்ற போர்வையில் மனிதரை நெறிதவறிய வழியில் இட்டுச் செல்லுகின்ற போதும், மனித மாண்பு சீர்குலைந்து செல்கின்ற போதும், சமயமே அவர்களைச் சரியான பாதைக்கு இட்டுச் செல்கிறது. அதேபோல் சமயம் பல்வேறு யதார்த்தங்களை "பரம இரகசியம்" - "மறைபொருள்" [mystery] என்ற போர்வையில் மூடிமறைக்கும்போதும், ஒரு சில உண்மைகள் மறைக்கப்படும்போதும் விஞ்ஞானமே உண்மையை அறியச் செய்யும் சாதனமாகச் [eye opener] செயற்படுகிறது. இந்த வகையில் இந்த இரண்டும் மனிதருடைய இரண்டு கண்களைப்போற் செயற்பட்டாலும், பல்வேறு

சந்தர்ப்பங்களில் இவ்விரண்டும் எதிர்த்திசையிலேயே செயற்படுகின்றன. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலேயே தத்துவம் பிரதானமான இடத்தை வகிக்கிறது. இவ்விரண்டையும் இணைக்கும் பாலமாகச் செயற்படுகிறது.

## தத்துவம்

பொதுவாக ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய வாழ்க்கையில் தனித்தனியான தத்துவங்களைக் கொண்டிருக்கின்ற போதிலும் தத்துவம் என்ற எண்ணக்கருவிற்கு இலகுவாக வரைவிலக்கணம் கொடுக்க முடியாதுள்ளது. ஏனெனில் இவ்வெண்ணக்கருவானது பரந்த அளவிலான அறிவையும் விளக்கத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இருப்பினும் பல்வேறு தத்துவவியலாளர்கள் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களை முன்வைக்கிறார்கள். அவற்றுள் பிரதானமாக ஏற்றுக் கொள்ளக் கூடியவைகள் பின்வருமாறு: தத்துவம் எல்லா அறிவினுடையவும் தொகுப்பாக இருப்பதால் இது ஓர் அறிவினுடைய செயற்பாடு; முழு உலகையும், உண்மையையும் [whole universe and reality] அறிந்து கொள்ளும் ஒரு தீவிரமான தொடர்ச்சியான முயற்சி; முழுமையிலுள்ள குணாதிசயங்களை உய்த்துணதுந்து, காரணங்களை உய்த்தறிந்து கொள்ளும் ஒரு முயற்சி உலகையும் வாழ்வையும் முழுமையாக அறிந்துகொள்வதற்கான நடைமுறை அனுபவ அறிவுகளின் தொகுப்பு; இவைகள் மெய்யியல் பற்றிய பல்வேறு விளக்கங்களாகும்.

சமயம், விஞ்ஞானம் என்பவற்றைப் போன்று தத்துவமும் சிறப்பான வகையில் மனிதரை உண்மை நிலையை நோக்கியே நகர்த்திச் செல்கிறது. இவ்வாறாக உண்மை நிலைக்கு நகர்த்திச் செல்லும் படிமுறை [process] தத்துவத்திலே பிரதானமான இடத்தைப் பெறுகிறது. அதாவது தத்துவம் தனக்கே உரிய பாணியில் ஒவ்வொன்றையும் பகுதிகளாகப் பிரித்தலும் [analysis] தொகுத்தலும் [synthesis] என்ற அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறது. எனவே தத்துவம் ஒவ்வொன்றையும் முறையிலும், ஆழமாகவும் ஆராய்ந்தறிந்து செயற்படுவதால், தத்துவத்திலே உண்மை நிலையை அடைவது மிகப் பொருத்தமாக அமைகிறது. உண்மையில் தத்துவம், உளவியல், அளவையியல், சமயம், விஞ்ஞானம் போன்ற பல அறிவியல்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் இது வெகுவாக மனிதருடைய சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் அதை விருத்தியும் செய்கிறது. மனிதரின் அடிப்படைச் சிந்தனையில் பரிணாம வளர்ச்சியை ஏற்படுத்துவது தத்துவம் என்று கூறினால் அது மிகையாகாது. வாழ்க்கையின் சுயமான, பொதுவான மதிப்பீடுகளை மேற்கொள்ளுவதற்கு தத்துவம் தூண்டு கோலாக அமைகிறது. அத்துடன் நடுநிலை வகிக்கக் கூடியதும், சமநிலை பேணக்கூடியதுமான தீர்மானங்களை மேற்கொள்ளுவதற்கு வழிசமைக்கிறது. இந்தவகையில் தத்துவம்; சமயம் விஞ்ஞானம்

என்பவற்றுடன் எத்தகைய தொடர்பு கொண்டுள்ளது என்பதை ஆராய்வோம்.

## விஞ்ஞானமும் தத்துவமும்

பொதுவாக "தத்துவம்" எல்லா அறிவியல்களின் தொகுப்பாக இருப்பதால், விஞ்ஞானம் அறிவியல் என்ற வகையில் தத்துவத்தின் ஒரு பகுதியாகவே அமைகிறது. இந்த வகையில் விஞ்ஞானமானது, தத்துவவியலாளர்களின் கருத்துப்படி பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகிய புலன்களால் உணரப்படக்கூடிய விடையங்களையே உள்ளடக்கி, அவற்றோடு அக்கறை செலுத்துகிறது. ஆனால் தத்துவமோ அதற்கும் அப்பாற் சென்று புலன்களால் உணரப்படமுடியாத பல விடயங்களிலும் அக்கறை செலுத்துகிறது; தீவிரமாக அலசி ஆராய்கிறது. உதாரணமாக, அன்றாட வாழ்க்கையில் எழுப்பப்படுகிற ஒரு சில முக்கியமான வினாக்களுக்கு விஞ்ஞானம் உரிய விடை கொடுக்க முடியாது திணறுகிறது. ஆனால் தத்துவமே உரிய வகையில் திருப்திகரமாக பதிலைக் கொடுக்கமுயல்கிறது. அதேபோல் ஒருசில விடயங்களை விஞ்ஞானம் அசட்டை செய்யும் அதே வேளை தத்துவமே அவற்றை முக்கியமானதாகக் கருதி அக்கறையும் செலுத்துகிறது. இதை அடிப்படையாகக் கொண்டு நாம் ஒரு முடிவிற்கு வரமுடியும்: விஞ்ஞானம் முறையில் பகுதியாக ஒருமுகப்படுத்தப்பட்ட அறிவு, அதேவேளை தத்துவம் முழுமையாகத் தொகுக்கப்பட்ட அறிவு இருப்பினும், விஞ்ஞானத்தினுடைய வளர்ச்சிக்கு தத்துவம் முக்கிய பங்காற்றி வருகிறது எனக் கூறின் மிகையாகாது. விஞ்ஞானம் விருட்சமாக வளர்ந்து கனிகொடுப்பதற்கு தத்துவமே வித்தாக அமைகிறது. சுருங்கக் கூறின் தத்துவம் மனிதருடைய சிந்தனையைக் கூர்மைப்படுத்துவதுடன் சிந்தனையைத் தூண்டி விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளிற்கும், அபிவிருத்திக்கும், வாழ்க்கைத்தர முன்னேற்றத்திற்கும் துணைபுரிகிறது. விரிவாகப் பார்க்கும்போது இரண்டும் ஒரே நோக்கத்தைக் கொண்டு செயற்படுகிறது. அதாவது, மனிதனுடைய அறிவாற்றலை விருத்தி செய்வதும், வாழ்வின் உலக விழுமியங்களை விருத்தி செய்வதுமேயாகும். எனவே இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, விஞ்ஞான அறிவைப் பெறுவதிலும் பார்க்க தத்துவ மயப்படுத்தலே சாலச்சிறந்ததாகும். ஏனெனில் தத்துவமயப்படுத்தலில் எல்லா அறிவியல்களும் பயன்படுத்தப் படுகின்றன.

## சமயமும் தத்துவமும்

பொதுவாகக் கூறின், சமயம் மனிதருடைய வாழ்க்கைத்தரத்திலேயே அக்கறைகாட்டுகிறது. மாண்புடனும் விழுமியங்களுடனும் வாழப்படவேண்டிய வாழ்க்கையின் தரம் குறைந்து போகாது பேணுவதற்கு சமயம் உந்துசக்தியாகத் திகழ்கிறது. சமய ஒழுக்க நெறிகளையும், விழுமியங்களையும், மதக் கொள்கைகளையும் மூலகங்களாகக் கொண்ட சமயம் அறிவியல் என்ற வகையால்

தத்துவத்தின் ஒரு பகுதியாக அமைகிறது. மனித வாழ்க்கையில் விஞ்ஞானத்தைப் போன்று சமயத்திலும் ஒரு சில விடயங்களுக்கு திருப்தி அளிக்கக்கூடிய பதில் கூற முடியாது மதவாதிகள் தவிக்கின்றபோது, தத்துவமே தத்துவமயப்படுத்தலின் மூலமாகவும், இதன் ஏனைய மூலகங்களாகத் திகழ்கின்ற அறிவியல் நுணுக்கங்களைப் பிரயோகிப்பதன் மூலமாகவும் திருப்திகரமான முறையில் பதிலளிக்கமுயல்கிறது. உதாரணமாக, கடவுளின் இருத்தல் தொடர்பாக சமயம் நிரூபிக்க முடியாமற் தவிக்கின்றபோது, தத்துவமே அதை நிரூபிக்கமுயல்கிறது. இதை விட கடவுள் நம்பிக்கையற்றவர்கள் [atheists] தொடர்பான பல விடயங்களிற்கும் தத்துவமே அக்கறை கொண்டு தகுந்த பதில் கொடுக்கமுயல்கிறது.

மனித மாண்பிற்கே விலைபேசுகின்ற இந்த நவீன யுகத்தில் மதக்கோட்பாடுகளை மதிக்காமல், மதத்தின் ஒழுக்க விழுமியங்களைக் குப்பை எனக் கருதி வாழ்கின்ற மனிதருக்கு, அவற்றை மதித்து பின்பற்றுவதற்கும், அதேவேளை குருட்டுத் தனமாக அவற்றைப் பின்பற்றுவதைத் தவிர்ப்பதற்கும் தத்துவம் வழிகாட்கிறது. அத்துடன் மத சம்பிரதாயங்கள், சடங்குகள் என்பவற்றை உரியமுறையில் நிறைவேற்றுவதற்கும் போதிய விளக்கம் கொடுப்பதில் தத்துவம் முக்கிய பங்காற்றுகிறது எனக் கூறின் மிகையாகாது.

## முடிவு

சமயம் விஞ்ஞானம் என்ற இரு துருவங்களாக விளங்கும் இவ்விரண்டும் எதிரும் புதிருமாகச் செயற்பட்டாலும், இரண்டும் மனித வாழ்வில் இரு கண்களைப் போன்று முக்கிய இடம் வகிக்கிறது. இருப்பினும் தத்துவமே இவ்விரண்டையும் இணைக்கும் பாலமாகச் செயற்படுவதுடன் மனிதரை இவ்விரண்டிலும் மிதமிஞ்சிப் போகவிடாது தடுக்கும் சாதனமாகவும் செயற்படுகிறது.

சமயம் விஞ்ஞானம் என்பன தத்துவத்தின் பகுதிகளாகவும் இருப்பதால், தத்துவத்தின் வளர்ச்சியில் துணை புரிவதுடன் ஏனைய துறைகளின் விருத்திக்கும் வழிகோலுகின்றன. சுருங்கக் கூறின், சமயம், விஞ்ஞானம், தத்துவம் என்பன மனித வாழ்வை மாண்புடன் வாழ்வதற்கும், வாழ்க்கையின் விழுமியங்களைப் புரிந்துகொள்வதற்கும் நேரடியாகவோ இல்லையேல் மறைமுகமாகவே துணைபுரிகின்றன.

# Synopsis:

# A war between Knowledge and Ignorance

**B. Uthaya**

We cannot deny the fact that philosophy arises from the tension between knowledge and ignorance. We try to acquire knowledge through our external senses and self-experience. With regard to the origin of knowledge there are two principles: Intellectualism and Experientialism.

'From where do we acquire knowledge?' and 'How do we acquire knowledge?' are the basic questions. When we hold that our experience is the root cause of our knowledge, it is called experientialism. If we say that ideas are the root cause of our knowledge it is called intellectualism. Appearance is an important gateway to knowledge. Next to appearance, experience takes a prominent place. We accumulate knowledge through many ways such as external senses, our experience, experience of others, books, etc.

Descartes speaks of intellectualism. That is, the decisions that we make derive from our ideas. Since we have these ideas there is no possibility of error. Leibniz holds that our knowledge is acquired through our thinking.

With regard to experientialism John Locke plays an important role. He elucidates that our mind is a "tabula rasa". (blank slate) Man receives his knowledge by his external senses. Emmanuel Kant accepts both of the above theories.

Doubting is found even in the ancient literature. In the beginning people started doubting morality, theology and all the religious beliefs. They went to the extent of doubting knowledge.
Doubts can be divided into two:

1. Full doubt
2. Partial doubt

When we do not have true knowledge we are tended to doubt everything.
As a conclusion, doubt is a temporary state of mind. It is in the process of knowing the truth. Once true knowledge is attained there will not be any doubt. Through doubt we can develop permanent knowledge . If there is no doubt there will not be any growth in our knowing process.

# “The Life of the Learned” As Expressed in *‘Thirukkural’* by *Valluvar.*

**-Francis Anantharayar – *“Vidvan Pulavar Velmaran”***

*Valluvar* wrote *“Thirukkural”*, when the Samana-Budhist developed revolutionary views about human knowledge during the latter part of *Sangham* period Tamil Nadu, India.

It contains 1330 *‘kurals’* which means ‘short sayings’ which are divided into three major groups: Virtue, wealth and Love.

*“Thirukkural”* emphasizes the moral life in both external and internal aspects. The state of knowledge is necessary for moral life. Knowledge is always in the process of knowing.

The state of knowledge of a human society is determined by its language and number of learned people both in the past and present. The state of knowledge contains the discretion and self awareness. This knowledge is common to all but it’s gravity differs from person to person. This controls our mind and the five senses and lead us to do good to others instead of doing harm. Normally the intellectuals do good to others.

We can identify the value and the nature of things from their utility. The one who has the correct knowledge will always choose the correct things. The nature of the state of knowledge is that it always has the capacity to grasp the technicalities of things from others’ conversation and to express them to others very clearly.

Those who have the state of knowledge will always act according to the time and place and avoid doing harm to others. From these instructions we gain guidance and grow in our knowledge. The character of the one who has the state of knowledge is that he or she will be afraid to do harm to others and bold enough to do good to others. It is absurd when one is not afraid when it is necessary to be afraid. This is foolhardiness. The work of the intellect is to act according to the situation. This is called prudence. Those who are in the state of knowledge will always

foresee the hardship which they are going to face. Therefore they can easily bear and easily manage the hardships.

A learned treats and faces equally happiness and sorrow, higher position and lower position. This will bring happiness forever. On the contrary, the life of the ignorant will always wander here and there.

Life is given to live and to let others live. This is the life of the learned which manifests human life as something beautiful and meaningful.

## Confucianism and its God experience

**-A. Confucious**

Confucius was a Chinese philosopher and a moral teacher (551-479 BC). He was very much influenced by the then social and political turmoil, and also by an extreme individualistic tendency. He founded Confucianism, proposing "sacred oneness" as its motive and final acheivement. Due to the new different forms of ideologies it is difficult to define Confucianism as a religion. But I consider it as a "way of life" and try to identify its "God experience".

Confucianism holds the view and belief that from the relationship between the heaven (Yang) and the earth (Yin), the humanity took its birth. Man possesses the rational faculty. He has to identify and cultivate his own inner divine being so that his whole personality may unite itself with the other creatures. This is what they call their "God experience". To achieve it, Confucianism encourages deep relationships among people and ancestral worships. But this God experience can be achieved in the course of time with the help of moral discipline.

# Linguistic Analysis in the Contemporary Philosophy

**S.U. Jehan**

The philosophical trends that emerged after the latter part of the $19^{th}$ century were included in the philosophy curricula as contemporary philosophy. The characters of these trends have 2 main methods:

1. Analytical method – trying to analyze the reality in relation to logical, scientific and linguistic factors
2. Phenomenological method – understanding the reality through practical situations, persons, existential incidents and experiences.

Thus some trends of contemporary philosophy have been characterized as analytical with good reason. In the past philosophers have pursued various tasks and visions without giving much attention to the question of nature of philosophy itself. In the wake of German and British idealism the philosophers of the time felt constrained to focus their attention on the values and limits of philosophy.

Medium of philosophy is language: therefore some trends of the contemporary philosophy became linguistic analysis. Linguistic scholars were convinced that many of the confusions in the history of philosophy, were the result of playing fast and loose with language.

Scholars like Betrand Russel and G.E.Moore stand out as British Philosophers who were concerned to keep philosophers from using lofty and metaphysical language which they called the abuse of language. A.J. Ayre operates on this assumption that there are only two types of language, which can be said to admit to knowledge and truth, namely logical discourse and empirical assertions. Originally this sets up a series of sharp contrast.

1. Between Metaphysics and science
2. Between logical and factual truths
3. Between verifiable and non – verifiable
4. Between the corrigible and incorrigible.
5. Between facts and theories

This also led the religious beliefs into great difficulty. Religious language became meaningless because it cannot be logically proved or empirically verified.

Latter part of Ludwig Wittgenstein's philosophy and the development of D.Z. Phillips on it came to the rescue of religious language. According to this view, different kinds of language, such as the religious language and scientific language, constitute different "language games" which are the linguistic aspects of different "forms of life". According to R.B. Braithwaite religious assertions serve primarily an ethical function, that is to express the speaker's adherence to certain policy of action. He further holds that beliefs about God are relevant to a persons practical behavior because they provide it with psychological reinforcement J.H. Randall contributes in his unique way conceiving religion as a human activity which, like it compeers science and art, makes its own special contribution to human culture as it stands as a figurative language which is full of symbols.

◈

## The Goal and the Nature of the Philosophy of Religion

**L. Mercy Sujanthini**

From ancient time onwards people give importance to religions and religious experience. We know that philosophy depends on "reasoning" and religion on "Faith". But the religious philosophers give more importance to religious faith than reasoning.

As we see in this Article, religious philosophers explain that all have the feeling of religiosity naturally. It is in our blood stream, as it were, running all through our body and also as human beings we have the inner urge towards the ultimate reality. This ultimate reality is called or known as God.

We human beings strive to achieve the ultimate reality which is God, in our day to day lives. Religions help us and render the ways or paths to achieve this ultimate reality. Our ancestors were afraid of the natural

powers. Therefore in order to escape the natural disasters they worshiped nature as God. Later on this nature worship paved the way for established religions.

Religions not only speak of spirituality but also of social and psychological aspects. Religions guide the people towards the moral life and lead them towards the development of the societies. They have different kinds of principles for which "faith" is the foundation. Humans felt that there is something that cannot be comprehended and experienced by them. This is the supernatural reality called God. Therefore eventually man/women has to depend on "faith".

Philosophy of Religion investigates the human expressions of faith. And it also tries to link this faith with the development of human life.

★ அடக்கம் அணிகலன் மட்டுமல்ல; அறத்தின் காவலன்

- ஜோஸஃப் அடிஸன்

★ நம் அதிர்ஷ்டத்துடன் துணிந்து போராடிவிட்டால், நாம் அதிஷ்டத்தை வெல்வது உறுதி

- ஸெனெகா

★ எதிரி தன்னை வென்றுவிடுவானோ என்று அஞ்சுகிறவனுக்குத் தோல்வி நிச்சயம்

- நெப்போலியன்

★ கல்வியின் வேர்கள் கசக்கும்; அதன் கனியோ இனிக்கும்

- அரிஸ்டாட்டில்

★ நம்பிக்கை இல்லாமையே அதிருப்தி: மனத்துணிவின் பலவீனமே அது.

- ராஸ்ஃப் வால்டோ எமெர்ஸன்

## John Locke (1632 – 1704)

**A. Justin**



John Locke was born on August 29, 1632 at Wrington near Bristol, England. He was not blessed with good health for the greatest part of his life and yet he reached the age of 72 years. He is called the father of Empiricism. It is a theory which states that all knowledge is based on experience. He denies the doctrine of Idealism and Platonism. He says that mind is a "white paper" – "Tabula Rasa", "void of all characters" at birth. The mind gets the "ideas" only with experience. Locke uses the word "idea" not in the Platonic sense but simply the immediate object of perception, thought or understanding. For him primary and secondary qualities of the objects are important to get the knowledge of a reality.

**Bibliography:**


MARY LOUISE CUFF, The education theory of John Locke, Washington: The Catholic Education Press, 1923, pp.7 –9.

PRINGLE. A. S. – PATTISON (ed), An Essay Concerning Human Understanding by John Locke, Britain: The Clarendon Press, 1960, pp. 8 –10.


## Philosophy – Science – Religion: A Comparative View

**P. Christy Nimalarajan**

Everything in the universe can be included in one of the above category. Many a time science has led humanity in a way that is not human. Religion also is accused that it has made humanity to be blind to the realistic human situations. But philosophy has the merit of mediating these two.

There is a process in science to attain truth: the process has observation, experience, experiment and finally arriving at truth. This process has led humanity to progress in many ways. For example, there is no place for superstitions and mysteries in science. And ignorance and skepticism are ruled out from the human society due to the advancement in science. At the same time, as above stated, science has also many negative aspects, like immoral life, individualism and materialism.

Like in science, there is also a process in religion, but this process is entirely different from that of science. It identifies itself with rituals, practices, taboos and inhibitions. Though there are many religions in the world, all religions have one goal: that is to arrive at the Truth. Religion deals above all with the inner life of man. It can have many mysteries, because these are the essential parts of any religion. In order to save guard these mysteries, religions have many a time suppressed the reality and kept their believers in ignorance.

We cannot give a simple and comprehensive answer to the question "what is philosophy?" Many accept philosophy as the synthesis of all knowledge. It covers the whole universe and realities. Above all the other sciences, philosophy is called the proper science that moves towards truth. Like religion and science, philosophy also has a process to arrive at truth. It has an analytic and synthetic method. These methods cover the whole realities. Therefore, philosophy is in proper position to arrive at truth.

Many a times we take science and religion as two extremes, opposing to each other in their nature and conduct. But both are important to humanity. Philosophy comes in between these two as a mediator not to allow either of them go to their extremities. Both science and religion are constituted as parts of philosophy. Therefore the growth in them will contribute to the growth of philosophy. In short all these three help humanity to live human life worthy of its name.

> To be conscious that you are ignorant is a great step to knowledge.
>
> **Benjamin Disrael**

# புரியவில்லை!!!

"மனிதர்கள் சுதந்திரமாகப் பிறக்கிறார்கள் தான்
ஆனால் எங்கும் சங்கிலிகளில் பிணைக்கப்பட்டிருக்கிறார்களே?"
ஆதங்கப் பட்டவன் ரூசோ.
மனிதனின் சங்கிலிகள் எத்தனை! எத்தனை!
வெளிக்காரணிகளால் பூட்டப்பட்ட சங்கிலிகள்
தனக்குத் தானே மாட்டிக் கொண்டவைகள்
பாவம் மனிதர்கள் எங்கும் சிறைகளில்...!






மனிதர்கள் மட்டுமா சிறையில்?
வெளிக்காரணிகளால் பிணைக்கப்பட்ட சங்கிலிகள்
சிறையில் தள்ளின மனிதர்களை.
தமக்குத் தாமே மாட்டிவிட்ட சங்கிலிகள்
-பதவிக்காக, புகழுக்காக, பணத்திற்காக-
சிறையில் தள்ளின மானிடத்தினை.
பாவம் மானுடம் சிறையில்...!



மானுடம் சிறையில் என்றால்
மனிதர்களோ வெளியில்
பணம், புகழ், பதவிக்காக அல்லாடிக் கொண்டு
மானுடம் தான் மனிதனின் ஆன்மா என்றால்
மனிதர்களோ இன்று மானுடம் வெளியேறிய கூடு
பாரும்! அவர் படும் பாடு...

புரியவில்லை...?
ஏன் இந்த மனிதர்கள் இப்படியிருக்கிறார்கள்?
சங்கிலிகளை
தவிர்க்கவும் முடியாமல்
ஏற்கவும் முடியாமல்...!



- சந்தேகி

## Glossary – அரும்பதங்கள்

1. Absurdity – பொருத்தமின்மை
2. Alienation – அன்னியப்படுத்தல், வேற்றுப்படுத்தல்
3. Apologia – மறை மெய்ப்பித்தல்
4. Archeology – தொல்பொருள் இயல்
5. Arms race – படைக்கலச் சேகரிப்புப் போட்டி
6. Ascetical life – ஒறுத்தல் வாழ்வு
7. Atheism – இறைமறுப்புக் கொள்கை
8. Atom – அணு
9. Cell – கலம்
10. Chromosomes – நிறமூர்த்தங்கள்
11. Coherence theory – இசைவுக் கொள்கை
12. Cohesion – அணுக்கவர்ச்சி
13. Contemplative – ஆழ்நிலைத் தியான வாழ்வு
14. Continence – நுகர்வடக்கம், இச்சையடக்கம்
15. Contraception – கற்பத்தடை
16. Correspondent theory – பொருத்தப்பாட்டுக் கொள்கை
17. Contingency – முடிவுள்ள வாழ்வு, அழியக்கூடிய வாழ்வு
18. Commutative – கொடுத்தல் வாங்கல் சமநீதி
19. Cult – வழிபாடு
20. Deity – தெய்வநிலை, தெய்வத்தன்மை
21. Dynamism – உயிரூட்டம், இயக்க ஆற்றல்
22. Elements – கூறுகள்
23. Ethics – அறவியல்
24. Euthanesia – இரக்கக்கொலை, கருணைக்கொலை
25. Explicate – வெளிப்படையான
26. Existential vacuum – இருப்பியல் வெறுமை
27. Federation – கூட்டமைப்பு, கூட்டிணைவு
28. Fraternity – உடன்பிறப்பாண்மை, சகோதரத்துவம்
29. Free will – சுயாதீன சித்தம்
30. Genocide – இன ஒழிப்பு
31. Geo-centrism – பூமி மையக் கொள்கை
32. Genes – மரபணுக்கள்
33. Helio-centrism – சூரிய மையக் கொள்கை
34. Heritage – மரபுச் செல்வம்
35. Humanism –மனித முன்னேற்றக் கொள்கை
36. Induction – அனுமானம்
37. Ingenuity – சாமர்த்தியம், புத்திசாதுர்யம்
38. Infanticide – குழந்தைக்கொலை
39. Morality – ஒழுக்கநெறி, அறநெறி
40. Nepotism – குருதிச்சலுகை(உறவினருக்குக் காட்டும் சலுகை)
41. Nucleus – கரு
42. Pedagogy – ஆசிரியவியல்
43. Pluralism – பன்மைமுறை
44. Preliminary – ஆரம்ப ஏற்பாடு
45. Relativism – சார்புக் கொள்கை
46. Reminiscence – நினைவு
47. Renaissance – மறுமலர்ச்சி
48. Repugnance – மிகையான வெறுப்பு
49. Theology – மறைக் கோட்பாடு, மறைக் கொள்கை
50. Utility – பயன்பாடு

# மெய்யியல் நோக்கு

(வருடம் இருமுறை)

தொகுப்பாசிரியர்: **யோ. போல் றொகான்,** L. Ph. (Rome)

துணையாசிரியர்: **சூ. டக்ளஸ் மில்ரன் லோகு,** B. A.(Phil.) (Madurai)

விநியோகம்: **வெ. எமில் எழில்ராஜ்,** (இளங்கலை மாணவன்)
**ஜெ. அ. ஜெயரஞ்சன்,** (இளங்கலை மாணவன்)
**ஜெ. எல்மோ அருள்நேசன்,** (இளங்கலை மாணவன்)

ஆலோசகர்: **லூயிஸ் பொன்னையா, அ.ம.தி.** L. Ph. (Rome)

வெளியீடு, விநியோகம்: **மெய்யியல்துறை**
**சவேரியார் குருத்துவக் கல்லூரி**
**கொழும்புத்துறை**
**யாழ்ப்பாணம்.**

## MEI - IYAL NOKKU

(Bi - annual)

Editor : J. Paul Rohan, L. Ph. (Rome)

Sub - Editor: S. Douglas Milton Logu, B. A. (Phil.) (Madurai)

Distributors: V. Emil Elilraj, (Under graduate)
J. A. Jeyaranjan, (Under graduate)
J. Elmo Arulnesan (Under graduate)

Consultant: Louis Ponniah, O. M. I., L. Ph. (Rome)

Publishers, Distributors:

Faculty of Philosophy
Xavier's Seminary
Columbuthurai, Jaffna.


**இலச்சினை விளக்கம்:**
எல்லையில்லா அகிலத்தில்,
எல்லையுள்ள உலகினில்,
சிந்திக்கும் மனிதன்
எழுப்பும் கேள்விகள்
எழுத்து வடிவில்

**Our Logo:**
Boundless Universe
Limited World
Reflecting Man
Raising Questions
In Written Form.

**அட்டையில் உள்ள 'உன்னையே நீ அறிந்திடு'**

– பொதுவானதொரு சிந்தனைக்கு உருவும், வரியும் கொடுத்தவர்
S. A. தவராஜா

# மெய்யியல் நோக்கு

அன்புமிக்க வாசகர்களே!

இவ்வெளியீடு பற்றிய உங்கள் கருத்துக்கள், விமர்சனங்களை ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

ஓர் ஆண்டிற்கு இரண்டு இதழ்களாக 'மெய்யியல் நோக்கு' தொடர்ந்து வெளிவருகிறது.

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 40.

"அறிவாளிகளுக்கும், பிரபுக்களுக்கும் என்றிருந்த மெய்யியலை வீதிகளுக்கும், பாதையோரங்களுக்கும், சந்தைகளுக்கும் கொண்டு வாருங்கள்."

-சோக்கிரட்டீஸ்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

மெய்[illegible]யல் நோக்கு
ச[illegible]பார் குருத்துவக்கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.